விலை சதம் 5

பக்கங்கள் 4

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A. தட்டாரத் தெரு, கொழும்பு.

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

சுதந்திரன்

THE "SUTANTIRAN"

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE.)

REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்

தனிப் பிரதி	சதம்	5
3 மாதச் சந்தா	ரூ.	6-00
6 மாதச் சந்தா	"	12-00
1 வருடச் சந்தா	"	24-00

மானேஜர்,
"சுதந்திரன்"
194 A, தட்டாரத் தெரு, கொழும்பு.

Phone: 3411

நாமார்க்கும் குடியல்லேம்

புத்தகம் 1 | கொழும்பு, சர்வஜித்து ஹு ஐப்பசி மீ 3உ திங்கட்கிழமை — Colombo, October, 20, 1947 — ஹிஜிரி 1366 துல்ஹஜ் பிறை 5 | இதழ் 139

"தொழிற் சங்க உரிமைக்குத் தொடர்ந்து போராடுவோம்"

அரசாங்க ஊழியர்களின் பிரதிக்ஞை

நகர மண்டபத்தில் பொதுக் கூட்டம்

அரசாங்கத்திற்கு வால் பிடிக்கும் பத்திரிகையின்விஷமப்பிரசாரம்கண்டனம்

'திரு. குணசிங்காவின் சதியால் நேரிட்ட மதிமோசம்'

கொழும்பு, அக் 19

சென்ற சனிக்கிழமை மாலையில் கொழும்பு நகரமண்டபத்தில் நடந்த பகிரங்க சேவையாளர் லீக்கின் பொதுக் கூட்டத்தில், வேலை நிறுத்தஞ் செய்வது உட்பட்ட பூரண தொழிற்சங்க உரிமைகளை அரசாங்கத் தொழிலாளர் பெற்றுக் கொள்ளுவதற்காகத் தொடர்ந்து அரசாங்க ஊழியர் போரை நடத்துவதற்கு வாக்குறுதி எடுக்கப்பட்டது.

திரு. எஸ். யாப்பா தமது தலைமைப் பேருரையில் அரசாங்க ஊழியர்கள் நீண்டகாலமாக விட்லி கவுன்ஸில்களுக்காகப் போராடியதாகவும், ஈற்றில் 1944-ம் ஆண்டில்தான் அதைப் பெற்றனரென்றும், பெற்றும் அத் திட்டம் ஒழிமறைவில் வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார். தொடர்ந்து திரு. யாப்பா பேசியபோது, பகிரங்க சேவையாளர் இலங்கையில் மற்றும் எந்தத் தொழிலாளர்களிலும் பார்க்க மிகவும் கேவலமாக இருக்கின்றனரென்றும், சென்ற ஜூன்மாத வேலை நிறுத்தம் பொதுஜன ஆதரவைத் தங்களுக்குக் கொடுத்துள்ளதாகவும் சொன்னார்.

திரு. வில்மட் பெரேரா முனிசிப்பல் தொழிலாளர் யூனியன், பகிரங்க சேவையாளருக்குத் தொழிற்சங்க உரிமை வழங்கப்படுவதை ஆதரிப்பதாக அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இரு தீர்மானங்களை வாசித்தார். திரு. டி. பி. இலங்கரத்ன கூறியதாவது:-

"எங்கள் எதிரிகள் சிலர் அரசாங்கத் தொழிலாளர் வேலை நிறுத்தஞ் செய்யக் கூடாது என்று கூறுகின்றனர். அதற்கு அவர்கள் கூறும் சாட்டு இங்கிலாந்தில் பகிரங்க சேவையாளர் வேலை நிறுத்தஞ் செய்வதில்லையென்பதே. இப் போலிச் சாட்டு கூறுபவர்கள் அரசாங்க சேவையாளர் மதிப்புடன் வாழ வேண்டுமென்பதைத்தான் மறந்துவிட்டார்கள்.

"சென்ற ஜூன் மாதத்தில் வேலை நிறுத்தஞ் செய்தவர்கள் திரும்பவும் வேலைக்குச் சென்றால் அவர்களுக்குத் தண்டனை விதிக்கப்படமாட்டாது என அப்பொழுது கூறப்பட்டது. ஆனால் இப்பொழுது ஏமாற்றம்தான் கிடைத்திருக்கிறது.

அரசாங்கத்தை ஆதரித்த சில புதினப் பத்திரிகைகள், பொய்ப் புதினங்களைப் பிரசுரித்தமையாற்றான் வேலை நிறுத்தத்தில் தொழிலாளர் தோல்வியுற்றனர்.

"சென்ற ஜூன் மாத வேலை நிறுத்தம் அரசாங்கத்தில் முட்டாள்தனத்தால் ஏற்பட்டதென்பதை எல்லோரும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

வேலையினின்றும் நிறுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு அரசாங்க உத்தியோகஸ்தனும் மீண்டும் அரசாங்கத்தால் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படும் வரைக்கும் போராடுவேன் என தலதா மாளிகாவை என்னும் கண்டி கோத்திரத்தில் சத்தியம் செய்துள்ளேன். இது பலனை அளிக்கும் என நம்புகிறேன்."

வர்த்தக யூனியன் பிரதிநிதியாகிய திரு. ஜி. எச். அபயசேகரா தமது சங்கம் அரசாங்க தொழிலாளர் தொழிற்சங்கஉரிமை பெறச் செய்துவரும் போராட்டத்தை ஆதரிப்பதாக வாக்குறுதியளித்தார்.

வங்கிக் குமாஸ்தாக்கள் வேலை நிறுத்தம் முறிந்ததற்குக் காரணம் திரு. குணசிங்காவின் திருவிளையாடல் தான் என்றும் திரு. அபயசேகரா குறிப்பிட்டார்.

துப்பாக்கிக்கு ஒருவர் இரை

சுட்டவர் கைது செய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டார்

நீர்கொழும்பு, அக். 19

நீர்கொழும்பில் குரானா என்னுமிடத்தைச் சேர்ந்த 75 வயதான நிலச் சுவான்தாரர் கே. எல். பெரேரா என்பவர் தமது காணியைக் கடந்து செல்லப் படாதென பி. எஸ். டெரெயூ என்னும் தொழிலாளரை எச்சரிக்கை செய்ததாகவும் தொழிலாளர் அதனைக் கவனியாது அவருடைய காணிக்கூடாகச் சென்றதாகவும் திரு. பெரேரா அவரை துப்பாக்கியால் சுட்டதாகவும் கூறப்படுகிறது. சுடப்பட்ட தொழிலாளி ஸ்தலத்தில் மரணமானார். திரு. பெரேராவை 20-ம் தேதிவரையும் ரிமாண்டில் வைக்கும்படி மாஜிஸ்டிரேட் உத்தரவிட்டார்.

ரூ 2600 ரொக்கம் களவு

கொழும்பு, அக். 20

மீரிகாம போலிஸ் பகுதியில் டுனேவிதா என்னுமிடத்தைச் சேர்ந்த திரு. டப்ளியூ. ஈ. டெப் என்பவருக்குச் சொந்தமான ரூ 2600 ரொக்கமும், ரூ. 100 மதிப்புள்ள ஒரு மோதிரமும் நேற்று முன்தினம் இரவு களவு போயிருப்பதாக போலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

பிரிவி கவுன்ஸிலுக்கு திரு. பிலிப் குணவர்தன அப்பீல்

இலங்கை கே. எஸ். பிரிட்டனுக்கு பறந்துசெல்வார்

கொழும்பு, அக். 20

கொழும்பு தெற்கு மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் பாராளுமன்றத்தில் அவிஸாவிளை அங்கத்தவரான திரு பிலிப் குணவர்தனவின் அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்ட விபரம் முன் வெளிவந்துள்ளது. இப்பொழுது பிரிவி கவுன்ஸிலுக்கு விண்ணப்பிக்க திரு பிலிப் குணவர்தன சார்பாக ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக இலங்கையிலுள்ள பிரபல கே. எஸ் ஒருவர் பிரிட்டனுக்கு விமானத்தில் செல்வார் என்று அறியப்படுகிறது

பர்மாவிலிருந்து மற்றுமோர் ஆங்கிலேயர்

இலங்கை பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தலைவர்

கொழும்பு அக். 20

பர்மா பரிபூரண சுதந்திர மடையப்போவதால் அங்குள்ள ஆங்கில அதிகாரிகள் வெளியேறி வருகிறார்கள். அப்படிப்பட்ட ஒருவரை இலங்கை அரசாங்கம் விவசாய இலாகா டைரக்டராக வரவழைத்திருக்கிறது. இப்பொழுது மற்றொரு ஆங்கில அதிகாரியான திரு. சி. என். பேஜட்டை இலங்கை அரசாங்கம் பப்ளிக் சர்வீஸ் கமிஷனின் சேர்மனாக நியமித்திருக்கிறது. இவர் நேற்றைக்கு முன் தினம் ரங்கூனிலிருந்து "காமரியா" என்னும் கப்பலில் கொழும்பு வந்து சேர்ந்தார். உடனே பதவியை ஏற்றுக் கொள்கிறார். இவர் பர்மாவில் சமீப காலம் வரை பப்ளிக் சர்வீஸ் கமிஷன் சேர்மனாக இருந்தவர்.

பரீட்சை முடிவுகள் ஐந்து மாதங்களாயும் வெளிவரவில்லை

ஆசிரியர்கள் சங்கத்தில் கண்டனம்

கொழும்பு, அக். 18

ஸஹிராக் கல்லூரியில் நேற்று நடந்த அகில இலங்கை ஆசிரியர் யூனியன் சங்கத்தில் திரு. ஜி. டி. இஸட். அபயரத்ன தலைமை வகித்துப் பேசியபொழுது கல்வி இலாகாவின் திறமையின்மையைப் பலமாகக் கண்டித்தார்.

"எத்தனையோ பாரதூரமான குற்றங்களுள் ஒன்று பரீட்சைகளின் முடிவைக் கல்வி இலாகா உடனுக்குடன் வெளிப்படுத்தாததொன்றாகும். எஸ். எஸ். ஸி. பரீட்சை அம்சங்கள் பரீட்சை முடிந்த அடுத்த மாதத்தில் வித்தியாதிகாரிக்குக் கிடைத்துள்ளது. ஆயின் ஐந்து மாதங்கள் சென்றும் ஏதோ அந்தரங்கமான காரணங்களால் பரீட்சைப் பெறுபேறுகள் வெளிப்படுத்தப்படவில்லை. இங்கிலாந்திலிருந்து நடத்தப்படும் பரீட்சைகளின் முடிவுகள் வெளிப்படுத்தப்படுவதிலும் பார்க்க இரட்டிப்பான காலஞ் சென்ற பின்பே இலங்கையில் வித்தியா பகுதியினரால் நடத்தப்படும் பரீட்சைகளின் பெறுபேறுகள் வெளிப்படுத்தப் படுகின்றன.

"வித்தியாதிகாரி, தாம் உருளும் சில்லைத் தடைசெய்யும் ஒரு கருவியெனக் கூறி கல்விக் கொள்கைக்குப் பாத்திரவாளியல்லர் என்றும் சொல்லியுள்ளார். ஆனால் அவரின் காரியாலயம் ஏன் திறமையற்றிருக்கின்றது என யான் கேட்கின்றேன். அரசாங்கம் உபாத்தியாயர்களுக்குத் தக்க வேதனம் கொடுக்காதபடியால், நல்ல தராதரமுள்ளவர்கள் உபாத்தியாயர் தொழிலை வெறுக்கின்றனர். ஆயின் அரசியல் வாதிகள் உபாத்தியாயர் தொழில் மிகவும் உயர்ந்ததென வெறுவாய் சப்புகின்றனர்.

"உபாத்தியாயர்கள் இருப்பதாகக் கூறப்படும் மிகவும் உயர்ந்த ஸ்தானத்திலிருந்து கீழே இறக்கப்பட்டு, இத்தனை காலமும் அரசியல் வாதிகள் உங்களுக்கு மடைப்பட்டம் கட்டியுள்ளார்கள் என்று சொல்லப்படல் வேண்டும். புதிய கல்வி மந்திரி இவ்விஷயங்களில் நன்மை செய்வாரென நான் எதிர் பார்க்கிறேன்.

திரு கே. நேசையா பேசிய போது கூறியதாவது:-

"இலங்கையை ஒரு சிறிய பிரிட்டன் ஆக்குவதை தேசமக்கள் விரும்பவில்லை. இது கல்வி சம்பந்தமாகவோ, நன்னடத்தை சம்பந்தமாகவோ நல்லதல்ல. இப்பொழுது வேண்டியது ஒரு புதிய கல்வித் திட்டமாகும்.

திரு. நேசையா கூறிய பத்து அம்சத் திட்டமாவது:-

1. வயது வந்த 100 பங்குப் பிள்ளைகளும் கல்வி கற்க வேண்டுமென அரசாங்கம் சட்டமியற்றல் வேண்டும்.

2. அரசினர் பாடசாலைகளிலும், உதவிபெறும் பாடசாலைகளிலும் ஒரே வசதிகளும், கல்வியும் மாணவர்களுக்குப் போதிக்க வசதியளித்தல் வேண்டும்.

3. தாய்பாஷை மூலம் ஆரம்ப கல்வி போதிக்கப்படல் வேண்டும்.

4. அரசாங்கம் பள்ளிப் பிள்ளைகளின் தேக ஆரோக்கியத்தைப் பாதுகாக்க வேண்டும்.

5. வயது முதிர்ந்தவர்களுக்கும் கல்வி போதிக்கவேண்டும்

6. தராதரமற்ற உபாத்தியாயர்களைத் தராதரங்களைப் பெறுமாறு செய்வித்தல் வேண்டும்.

7. ஆங்கில கல்வி ஆலோசனைச் சபைபோல் இங்கும் கல்விச் சபை அமைக்கப்படல் வேண்டும்.

8 உபாத்தியாயர்களுக்கு மற்றும் பகிரங்க உத்தியோகஸ்தர்களுக்குப் போல் சம்பளம் விதித்தல் வேண்டும்.

9. உபாத்தியாயர்களுக்கு மிகவும் சீக்கிரத்தில் ஒரு பென்ஷன் திட்டம் வகுக்கப்படல் வேண்டும்.

10. சர்க்கார் உதவி பெறும் பள்ளிக்கூடங்களுக்கு, அரசினர் தேவையான பண உதவி செய்தல் வேண்டும்.

'உண்மையான பிரதிநிதியல்ல'

ஆசியா தொழிலாளர் மகாநாட்டிற்கு இலங்கைசர்க்கார்நியமித்திருக்கும்ஆசாமி

வருப்பு துவேஷமும் பலமற்றதும் பிளவுள்ளதுமானது தொழிற் சங்க காங்கிரஸ்

டில்லிக்கு தொழிலாளர் பெடரேஷன், இலங்கை இந்திய காங்கிரஸ் தொழிலாளர் சங்கம் அனுப்பியுள்ள தந்தி

கொழும்பு, அக். 20

புதுடில்லியில் நடைபெறவிருக்கும் ஆசியா தொழிலாளர் மகாநாட்டிற்கு இலங்கை சர்க்கார், தொழிலாளர் பிரதிநிதியாக டாக்டர். சி. ஜே. சி. ஸில்வாவை நியமித்திருப்பதை ஆட்சேபித்து இலங்கை தொழிலாளர் பெடரேஷனும் இலங்கை இந்திய காங்கிரஸ் தொழிலாளர் சங்கமும் புதுடில்லிக்கு சர்வ தேச தொழிலாளர் சங்க டைரக்டருக்கு கீழ்க்கண்டதந்தியனுப்பியிருக்கின்றன:- அகில இலங்கை தொழிற்சங்க காங்கிரஸின் பிரதிநிதியை ஆசியா தொழிலாளர் மகாநாட்டுக்கு இலங்கை தொழிலாளிகள் பிரதிநிதியாக இலங்கை சர்க்கார் நியமித்திருக்கிறார்கள். அந்த அகில இலங்கைத் தொழிற்சங்க காங்கிரஸ் வகுப்புவாத ஸ்தாபனமாகும். அது தொழிலாளர் நலனைக் கருதக் கூடிய ஸ்தாபனமல்ல அந்த ஸ்தாபனத்தில் தொழிலாளர்கள் அங்கத்தினர்களாக அதிகமில்லை. அதன் செல்வாக்கு நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. இலங்கைத் தொழிலாளர் பெடரேஷனும் இலங்கை இந்தியன் காங்கிரஸ் தொழிலாளர் சங்கமும் இந் நியமனத்தை பலமாக கண்டித்தும் அதைப் பொருட்படுத்தாமல் இலங்கை சர்க்கார் அகில இலங்கைத் தொழிற்சங்க காங்கிரசின் பிரதிநிதியை மகாநாட்டுக்குப் பிரதிநிதியாக நியமித்திருக்கின்றனர்.

இலங்கை சர்க்கார் தொழில் மந்திரி பார்லிமெண்டரி காரியதரிசி (திரு. ஏ. ஈ குணசிங்கா) வின் தூண்டுதலால் இலங்கை சர்க்கார் இவ்வித நியமனம் செய்திருக்கிறார்கள். அவர்தான் அகில இலங்கை தொழிற்சங்க காங்கிரஸின் தலைவர். இதன் அங்கத்தினர்கள் பலர் இவரது தலைமைப் பதவியை எதிர்த்தும் இவர் அப்பதவியை விடாது பற்றிக் கொண்டிருக்கிறார்.

இலங்கைத் தொழிலாளர் பெடரேஷனில் 13 யூனியன்களைச் சேர்ந்த 22,000 அங்கத்தினர்களிருக்கிறார்கள். இந்த பெடரேஷன் உலக தொழிற் சங்க பெடரேஷனுடன் இணைக்கப்பட்டுள்ளது.

இலங்கை இந்தியன் காங்கிரஸ் தொழிலாளர் சங்கத்திற்கு 117,000 அங்கத்தினர்களிருக்கிறார்கள். இதில் தோட்டங்களில் வேலைசெய்யும் எல்லா வகுப்புகளையும் சேர்ந்த தொழிலாளர்கள் அங்கத்தினராக இருக்கிறார்கள். இந்த இரு ஸ்தாபனங்களினுள்தான் இலங்கையிலுள்ள பெரும்பாலான தொழிலாளர்கள் அங்கம் வகிக்கிறார்கள்.

இச்செய்தியை உடனே அத்தாட்சிக் கமிட்டிக்குத் தெரிவித்து இலங்கைத் தொழிலாளர்களின் உண்மையான பிரதிநிதியை ஆசியா மகாநாட்டுக்கு நியமிக்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டும்.

திரு. குணசிங்காவுக்கு எதிர்ப்பு

கொழும்பு, அக். 19

வர்த்தகத் தொழிலாளர் சங்கத்தின் நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர் பலர் தலைமைக் காரியாலயத்திலன்றி வேறு இடத்தில் நிர்வாகக் கமிட்டியைக் கூட்ட வேண்டுமென்று சங்கத் தலைவர் திரு. ஏ. ஈ. குணசிங்காவுக்கு மனுச்செய்திருந்தனர். அதற்கு அனுமதியளிக்க முடியாது என்று திரு. குணசிங்கா பதிலளித்து விட்டார்.

அரசாங்க ஊழியர்கள் மீது புதிய நடவடிக்கை

ஓய்ந்துபோன வேலைநிறுத்தத்தின் எதிரொலி

குற்றஞ்சாட்டப் பட்டிருந்தவர்கள் விசாரணைக் கழைக்கப்படுகின்றனர்!

["சுதந்திரன்" அரசியல் நிருபர்]

அரசாங்கத் தொழிலாளர் வேலைநிறுத்தத்தில் பங்கு பற்றியவருள் முதன்மையானோருக்குத் தண்டனை விதிக்கும் நடவடிக்கைகள் மீண்டும் தொடங்கப்பட்டிருக்கின்றன. பொதுத் தேர்தலை முன்னிட்டு அதிகாரிகள் மௌனமாக இருந்தார்கள் என்று கூறப்படுகிறது. நான்கு மாதங்கள் கழிந்த பின்னர் குற்றஞ் சாட்டப் பட்டவர்கள் ஒருவர் பின் ஒருவராக விசாரணைக்கு அழைக்கப் படுகின்றனர் எனப் பேசப்படுகிறது.

முதன் முதலாக வருமானவரி இலாகாவில் குமாஸ்தாவாகக்கடமை பார்க்கும் திரு பி. பாக்கியநாதன் மேல் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டதாக அறியப்படுகிறது.

சென்ற ஆனி மாதத்தில் அரசாங்கத்தார் "தொழில் நிறுத்த விசாரணைக் கமிட்டி" என்ற ஒரு விசேஷக் கமிட்டியை நியமித்து அந்தக் கமிட்டியே இந்த விஷயத்தைப் பற்றிய எல்லாக் குற்றச்சாட்டுகளையும் விசாரணை செய்யும் என்று அறிக்கையிட்டனர். அதே பிரகாரம் அந்தக்கமிட்டி இரண்டு இடைக்கால அறிக்கைகளைவெளியிட்டது. ஆனால் தற்போதைய அரசியல்திட்டத்தின்படி அந்தக் கமிட்டியிடம் விசாரணைகளை விடாமல் ஒவ்வொரு இலாக்கா தலைவருமே தங்கள் தங்கள் இலாகாவில் உள்ள குற்றஞ் சாட்டப் பட்டவர்களை விசாரணை செய்ய வேண்டுமென்று விதிக்கப் பட்டிருக்கிறதாம். அதன்படி திரு. பாக்கியநாதன் மேல் சாட்டப்பட்ட குற்றங்களை யிட்டு வருமானவரி இலாகா அதிகாரி திரு. இராசபத்திராணா விசாரணை நடத்தினர்.

விசாரணையின் முன்பு, குற்றஞ்சாட்டப் பட்ட திரு. பாக்கியநாதன் தன்னுடைய நபத்தைப் பாதுகாக்கும் நோக்கமாக விசாரணையின்போது ஒரு நியாயவாதி ஆஜராயிருக்க அநுமதி கேட்டார். அவருடைய கோரிக்கைக்கு அதிகாரிகள் இணங்கவில்லை. நியாயவாதி பிரசன்னமாயிருக்க விரும்பாவிட்டால் "குற்றஞ் சாட்டப் பட்டவருடைய நண்பன்" என்ற கோதாவில் அரசசேவையிலிருக்கும் ஒருவர் பிரசன்னமாயிருக்க அநுமதி கேட்டார் அதுவும் மறுக்கப்பட்டுள்ளதாம். மேலும் தன்மேல் சாட்டப்பட்ட குற்றச் சாட்டுகள் "சர்க்கார் சேவை கட்டுப்பாட்டுப் பிரமாணங்கள்" என்ற பிரமாணங்களுள் குறிக்கப்பட்ட எந்தப் பிரமாணத்தின் கீழுண்டு என்று அறிவிக்கும்படி கேட்டாராம். அதற்கு விடைகொடுக்க வேண்டிய தேவை யில்லையென்று அதிகாரிகள் கூறிவிட்டனர். கடைசியாக முன்னர் வருமானவரிக் கமிஷனராக இருந்த திரு. ரி. டீ. பெரேராவின் ஒரு கூற்றைச் சாட்சியமாக வைத்துத் தன்மேல் குற்றஞ்சாட்டப்பட்ட படியால் குறித்த திரு. பெரேராவை விசாரணையின் போது வரவழைத்து அவரைக் குறுக்குவிசாரணை செய்யச் சந்தர்ப்பமளிக்க வேண்டுமென்று திரு. பாக்கியநாதன் கேட்டாராம். அதுவும் அநுமதிக்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது. இந்தக்கோரிக்கைகள் எல்லாம் விசாரணைக்கு முன்னர் எழுத்துமூலமாக நடத்தப்பட்டனவாம்.

விசாரணையின் போது இரண்டு குற்றங்கள் சுமத்தப்பட்டன. அவையாவன:-

1. "சென்ற ஆனிமாதத்தில் தொழில் நிறுத்தம் நடந்த போது குமாஸதாக்களை திரும்பவும் கடைமை யாற்றும்படி அப்போதைய வருமானவரிக் கமிஷனர் திரு. ரி. டீ. பெரேரா எடுத்த பிரயத்தனங்களுக்கு திரு. பாக்கியநாதன் முட்டுக்கட்டை போட்டார்.

2. பிற்பாடு கண்டிக் தொகுதியில் தேர்தலில் போட்டியிட்ட திரு இலங்கரத்னவுக்கு தேர்தல் செலவுக்கு கொடுக்கும் நோக்கமாக பணம் சேகரித்தார்" என்பனவே.

திரு. பாக்கியநாதன் முதலாம் குற்றச்சாடடை மறுத்தும் இரண்டாம் குற்றச்சாட்டின், பேரில் தேர்தல் செலவுக்குப் பணம் சேர்க்க வில்லையென்றும் முன்னர் குமாஸதாக்கள் சங்கத்தலைவராயிருந்து வேலையை யிழந்தமையை முன்னிட்டு அவருக்கு சன்மானம் செய்யும்நோக்கமாகவே பணம் சேகரிக்க முன்வந்ததாகவும் பதில் கொடுத்துள்ளாராம்.

இன்னும் 35 பேர் வரையில் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் விசாரிக்கப் படுவர் என்று அறியவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
THE "SUTANTIRAN"
194 ஏ, கட்டாரத் தெரு, கொழும்பு.
போன்: 3411.

சர்வஜித்து ஸு ஐப்பசி மீ 3உ
திங்கட்கிழமை

தனி மரம் தோப்பாகும் விந்தை!

அடுத்து வரும் திங்கட்கிழமை புதுடில்லியில் ஆசியா தொழில் மகாநாடு நடைபெறும். ஆசியா மண்ணில் இத்தகைய ஒரு மகாநாடு நடத்தப்படுவது இதுவே முதல் தடவையாகும். சென்ற 1927-ம் ஆண்டில் ஜெனிவாவில் நடைபெற்ற சர்வதேச தொழில் மகாநாட்டுக்கு இந்தியாவின் பிரதிநிதியாகச் சென்றிருந்த திரு. வி. வி. கிரி, இத்தகைய ஒரு தொழில் மகாநாட்டை ஆசியாவிலும் நடத்த வேண்டும் என்று யோசனை கூறினார். இன்று இருபது வருடங்களுக்குப் பின்பாவது அவர் தீர்க்க தரிசனம் பூர்த்தியாவதையிட்டு நாம் அவரைப் பாராட்டுகின்றோம்.

இம் மகாநாட்டில் இருபதுக்கு மேற்பட்ட தேசங்கள் கலந்து கொள்ளும். 400 பிரதிநிதிகள் விஜயம் செய்வார்கள். மகாத்மா காந்தி மகாநாட்டைத் திறந்து வைப்பார். பண்டித நேரு மகாநாட்டில் பேசுவார். ஆங்கு ஆசிய நாடுகளின் சமூக பாதுகாப்புப் பிரச்னைகள் விவாதத்துக்கெடுத்துக் கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. சமூகப் பாதுகாப்பு என்று கூறும்பொழுது, கைத்தொழில் அபிவிருத்தி, பொருளாதாரச் சீர்திருத்தம், தொழிலாளர் பிரச்னைகள் முதலியனயாவும் அதில் அடங்கியுள்ளன.

சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் இருபது வருடங்களுக்குப் பிறகுதான் ஆசியாவும் தனக்குச் சொந்தமான தொழில் பிரச்னைகளை தீர்த்துக் கொள்ளுவதற்கு வைத்திருக்கின்றது என அறிந்து கொள்ளும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இவ்வளவு காலம் தாழ்த்தி வந்தது கிழக்கு நாடுகளின் துரதிர்ஷ்டமாகும். மேற்கத்திய நாடுகளிலும் கிழக்கத்திய நாடுகளிலும் உள்ள பொருளாதார நிலைமை, தொழில் அபிவிருத்தி முதலியவற்றில் வேற்றுமை அதிகம் உண்டு. ஆகவே ஐரோப்பிய தொழில் நிலைமையைக் கொண்டு ஆசியாத் தொழில் பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்ள முடியாது. ஆசியாவில் தொழில் அபிவிருத்தி, இன்னும் முளையில்தான் இருக்கின்றது. சமூகப் பொருளாதாரம், தேச வேற்றுமை, சமூக வேற்றுமையின்படியே தீர்க்கப்பட வேண்டியவற்றில் ஒன்று இப்பொழுதாவது ஆசிய மக்களின் தொழில் பிரச்னை தீர்க்கப்படும் காலம் நெருங்கிவிட்டது என்பது யாவருக்கும் சந்தோஷத்தை அளிக்கும். அதிலும் மகாத்மா காந்தி பங்குபற்றுவது எவருக்கும் மிகுந்த சந்தோஷத்தையளிப்பதாகும்.

இப்புனிதமகாநாட்டுக்குவிஜயம்செய்யும்படி இலங்கைக்கும் அழைப்பு வந்துள்ளது. இந்தியாவிலுள்ள இலங்கை சர்க்கார் பிரதிநிதி திரு. எம். டபிள்யூ. எச். டி. ஸில்வா, அக்டோபர் 27-ம் தேதிமுதல் நவம்பர் 8-ம் தேதிவரை நடைபெறும் ஆசியா தொழில் மகாநாட்டுக்கு இலங்கைப் பிரதிநிதிகள் கோஷ்டித் தலைவராக விஜயம் செய்வாரென்று சென்ற சனிக்கிழமை வெளிவந்த இலங்கைத் தொழில் மந்திரி காரியாலய அறிக்கை ஒன்று கூறுகின்றது. திரு. ஸில்வாவுடன் உதவி தொழில் கமிஷனர் திரு. பி. பொன்னையாவும் முதலாளிகள் சார்பாக, திரு. ஸி. எச். இஸட். பெர்னாண்டோவும், அவரின் ஆலோசனையாளர்களாக திரு. ஸிரில். டி. ஸொய்ஸாவும், திரு. ஜே. ஏ. டி. பெரேராவும் செல்லுவார்கள்.

இவர்களையிட்டு எவருக்கும் கவலையில்லை. ஆனால் இலங்கைத் தொழிலாளர் பிரதிநிதிகளாக டாக்டர் ஸி. ஜே. டி. ஸில்வாவும் இன்னும் இரண்டு பேர் குறிப்பிடப்படாதவர்களும் செல்லுவார்கள் என்றும் அம் மந்திரி காரியாலய அறிக்கை கூறுகின்றது. டாக்டர் ஸில்வாவை தொழிலாளர்பிரதிநிதியாக அங்கீகரிக்கப்படாதென்பதே தொழிலாளர் கோரிக்கையாகும். டாக்டர் ஸில்வா தங்கள் பிரதிநிதியாகச் செல்லுவதை ஆட்சேபித்து இலங்கைத் தொழிற் சங்க பெடரேஷனும், இலங்கை இந்தியக் காங்கிரஸ் தொழில் சங்கமும் டெல்ஹியிலுள்ள சர்வ தேசிய தொழில் கந்தோருக்குத் தந்திகள் அனுப்பியிருக்கின்றனர்.

டாக்டர் ஸில்வா, அகில இலங்கைத் தொழிற் சங்கக் காங்கிரஸால் தெரிவு செய்யப்பட்டவர். இக்காங்கிரஸ் பெயரளவில் உள்ளதேயல்லாமல், அதில் அங்கத்தவர்களே கிடையாதென்று, ஆட்சேபிக்கும் மற்ற இரு சங்கத்தினரும் கூறுகிறார்கள். அவர்கள் சொல்லுவதில் உண்மை உண்டு என்பதை எந்தத் தொழிலாளியும் மறுக்க முடியாது. சுருங்கச் சொன்னால் அது திரு. ஏ. ஈ. குணசிங்காவின் தனிச் சங்கம். தமிழர் என்றால் திரு. குணசிங்காவுக்கு வேப்பங்காய்; மலையாளி என்றால் நாராசம்; இந்தியன் என்றால் விஷம். இவ்வித மானவரின் சங்கத்தில் எத்தனை பேர் இருப்பார்கள் என்பதை வாசகர்களே அறிந்து கொள்ளுங்கள். ஆயின், திரு. குணசிங்காதான் தொழில் மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசி. ஆகவே அவர் தனது தனி மரத்தைத் தோப்பாக்க எண்ணியுள்ளார் போலும்! இதற்கு இலங்கை அரசாங்கம் இடம் கொடுப்பது கேவலமான செயலாகும்.

இலங்கைத் தொழிற் சங்க பெடரேஷனில் பதின்மூன்று வேறு சங்கங்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன. 22,000 தொழிலாளர் அங்கத்துவம் வகிக்கிறார்கள். உலகத் தொழிற் சங்க பெடரேஷனுடன் இலங்கைப் பெடரேஷன் இணைக்கவும் பட்டிருக்கிறது. அடுத்தபடியாக இலங்கை இந்தியன் காங்கிரஸ் தொழிலாளர் யூனியனில் 117,000 அங்கத்தவர்கள் இருக்கிறார்கள். எல்லோரும் இலங்கைத் தோட்டத் தொழிலாளர்கள்.

இவ்விரு பெருஞ் சங்கங்களையும் புறக்கணித்து, திரு. குணசிங்காவின் சங்கப் பிரதிநிதியைத் தொழிலாளர் பிரதிநிதியாக அனுப்ப இலங்கை அரசாங்கம் உத்தேசித்திருப்பதைப் பலமாகக் கண்டிக்கிறோம்.

'இந்தியாவில் பிரெஞ்சு விமானங்களைத் தடுக்க வேண்டும்'

வியட்நாம் பிரதிநிதியின் கோரிக்கை

புதுடில்லி, அக், 19

வியட்நாமுக்கு இந்தியாவும் பாக்கிஸ்தானும் உதவ வேண்டுமென இந்தியாவிலுள்ள வியட்நாம் பிரதிநிதி ஸ்ரீ மாய் என்பவர் டில்லி ரோடடரி கிளப்பில் பேசுகையில் கூறினார்:-

இந்தியா வழியாக செல்லும் பிரெஞ்சு விமானங்களைத் தடுக்கும் படியாகவும் இந்தியாவில் இருக்கும் பிரெஞ்சு வர்த்தகக் கோஷ்டி நடவடிக்கைகளைத் தடுக்கும்படியாகவும் இவர் கேட்டுக்கொண்டார்.

'ஆசியாவிலேயே தலைமை தாங்கி நிற்கும் பாக்கியம் பெற்றது இந்தியா. ஆகவே இந்தியாவின் உதவியைக் கோருவது எங்கள் கடமை. இன்று வியட்நாமில் குடியரசு ஆட்சி இருக்கிறது என்றால், அதற்கு இந்தியாவும் பெரும் காரணம். இந்தியாவிடமிருந்து நாங்கள் ஏராளமான பாடங்களைக் கற்றோம். அதில் தேச பக்தியே நாங்கள் கற்ற முக்கிய பாடம்' என்று அவர் மேலும் கூறினார்.

மகாத்மாவுடன் சோஷியலிஸ்ட் தலைவர்கள் பேச்சு

புதுடில்லி, அக். 16

சோஷியலிஸ்ட் தலைவர்களான ஸ்ரீமதி கமலா தேவி சடோபாத்யாயா, ஆச்சார்ய நரேந்திரதேவ், ஸ்ரீ மனு பாய் இமானி ஆகியோர் இன்று பிற்பகல் மகாத்மா காந்தியைச் சந்தித்து, அகதிகள் புனருத்தாரணம் பற்றி விவாதித்தனர்.

ஆசியாவைபற்றி அமெரிக்காவின் அறியாமை

ஸ்ரீமதிவிஜயலட்சுமிபண்டிட்டின் எச்சரிக்கை

அமெரிக்கமக்களுக்கு அரசியல் ஞானோபதேசம்

அமெரிக்க அந்நிய நாட்டுக்கொள்கை சங்கத்தில் பிரசங்கம்

நியூயார்க், அக், 18

இன்று இங்கு அமெரிக்க அந்நியநாட்டுக் கொள்கை சங்கத்தின் விருந்துக் கூட்டத்தில், ஐக்கிய தேச அசெம்பிளியின் இந்தியப் பிரதிநிதிக் கோஷ்டித் தலைவரான ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் பேசியபோது பின் வருமாறு தெரிவித்தார்:—

நவ இந்தியா ஐக்கிய அமெரிக்காவுக்குச் செல்லவேண்டியதென்ன? உலகில் அமெரிக்கா வகித்து வரும் உன்னத பதவியை இந்தியா அறியும். அமெரிக்கா தற்சமயம் ஐரோப்பாவைப்பற்றியே அதிக கவனம் செலுத்தி வருகிறது. அதனால் நாங்கள் அருவெறுப்புக்கொள்ளவில்லை. ஆனால் ஐரோப்பிய நிலைமை எவ்வளவு நெருக்கடியானதாக இருக்கிறதோ அதை விட நெருக்கடியான நிலையில் இன்று ஆசியா இருந்து வருகிறதென்பதை அமெரிக்கா உணரவேண்டும்.

உலகப் பொருளாதாரச் சீர்கேட்டால் ஆசியாவில் பஞ்சம் ஏற்பட்டுள்ளது ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கும் அவைகளின் ஆதிக்கத்திற்குட்பட்டிருக்கும் ஆசியாவிலுள்ள குடியேற்ற நாடுகளுக்குமிடையே போராட்டங்கள் நிகழ்கின்றன. இவைகள் ஒருபுறமிருக்கட்டும். ஆசியாவிலுள்ள மக்களது பொருளாதார சமூகப் புனருத்தாரணம் ஏற்பட்டாலொழிய உலகப் பொருளாதார மீட்சி எக்காலத்திலும் ஏற்படாதென்பதையும் உலகப் பொருளாதார நிலை எப்பொழுதும் சீர்கேடாகவும் அபாயகரமாகவும் இருக்குமென்பதையும் உலகிலுள்ள ஒவ்வொருவரும் உணரவேண்டும். ஆசியாவும் ஆசியா மக்களும் முன்னேற்றமடையாமலிருப்பதை உலகம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. நாகரீக மனிதனின் அபிவிருத்திக்குப் பொருத்தமான வாழ்க்கைத் தரத்திற்கு ஆசியாவின் மக்களை உயர்த்தாமல் உலகம் தூங்கிக்கொண்டிருக்க முடியாது.

சரித்திரக் கோளாறால் அமெரிக்கா இதுவரை இந்தப் பிரச்னையில் போதிய பணம் செலுத்தவில்லை. ஆசியாவின் பிரச்னைகளையோ அல்லது இந்தியாவின் நிலைமையையோ உண்மையாக அறிந்துகொள்ளத் தக்க பயிற்சி அமெரிக்காவின் தலைவர்களுக்கு இல்லை. அமெரிக்கா உண்மையிலேயே உலக அமைதிக்கும் சமாதானத்திற்கும் சேவை செய்வதில் முதன்மை ஸ்தானம் விரும்புவதாக இருந்தால், அது ஆசியாவின் பல்வேறு விதமான சமூக அமைப்புகளையும், சரித்திர சம்பவங்களையும், அரசியல் முன்னேற்றத்தையும் நன்கு உணர்ந்து அவைகளுக்கேற்ப நடந்து கொள்ளப் படிக்கவேண்டும்.

உலக விவகாரங்களில் ஆசியா பெரும் பங்கெடுத்துக் கொள்ள வேண்டியதாக இருக்கிறது. ஆசிய நாடுகள் ஜனநாயக முறையில் சுதந்திரமடைவதற்கான மார்க்கங்களைத் தேடுவது அமெரிக்காவினதும், இந்தியாவினதும் லட்சியமாக இருக்க வேண்டும். இந்த லட்சியத்தில்தான் அமெரிக்காவும், இந்தியாவும் மனப்பூர்வமாக ஒத்துழைக்க முடியும்.

உலக யுத்தத்தின் முடிவில் பிரிட்டன் அதிகாரம் இந்தியாவுக்கு மாற்றப்படாது சாதாரண காலத்தில் மாற்றப்பட்டிருந்தால் சுதந்திர இந்தியாவின் புதிய நிர்வாகம் இவ்வளவு சங்கடங்களை அனுபவிக்க வேண்டியதிருந்திருக்காது. இப்பொழுது உணவு நெருக்கடி மட்டுமல்ல. மற்றும் சமூக சம்பந்தமாகவும் பொருளாதார சம்பந்தமாகவும் பல பிரச்னைகள் கிளம்பியிருக்கின்றன. மக்கள் சுபீட்சத்தை முன்னிட்டு இப்பிரச்னைகள் யாவையும் உடனடியாகத் தீர்க்கவேண்டியதாக இருக்கிறது. இந்திய மக்கள் இவ்வித நிலையில் பொறுமையை அனுஷ்டித்து வருகிறார்கள். இரு மாதங்களுக்கு முன்னர் பொறுப்பை ஏற்றுக்கொண்ட புதிய சர்க்கார் மிக்க கஷ்டமான நிலைமையில் திறம்பட சமாளித்து நிர்வாகத்தை நடத்தி வருகிறார்கள்.

உலக சமாதானத்திற்கு ஆபத்து ஏற்படக்கூடிய நிலைமை ஐரோப்பாவில்தான் இருந்து வருகிறதென்று அமெரிக்க ஜனங்கள் கருதி வருகிறார்கள்.

உலக சமாதானத்திற்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய நிலைமை ஆசியாவில்தான் அதிகமாகயிருந்து வருகிறதென்பதை நான் உங்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். தூரத்திலிருக்கும் உங்களுக்கு இப்பேராபத்து துலங்காதிருக்கிறது.

(ராய்ட்டர்)

இலங்கைக்கு கள்ளத்தனமாக சரக்குகள் ஏற்றுமதி

கோடிக்கரையில் ரூ. 70,000 பெறும் கஞ்சா ஜவுளிகள் பிடிபட்டன

சந்தேகத்தில் 13 பேர் கைது

வேதாரண்யம், அக். 17

கள்ளத்தனமாகக் கொண்டு வரப்பட்டதும், படகில் இலங்கைக்கு அனுப்பத் தயார் செய்யப்பட்டிருந்ததுமான ரூ 70,000 பெறும் அபின், கஞ்சா, ஜவுளிகள் ஆகியவைகளை 16-ம் தேதி காலை கடலோர காவல் படையினர் கைப்பற்றினர். கள்ளத்தனமாகக் கொண்டு வந்தவர்கள் இப்பொருள்களை அப்படியே விட்டு விட்டு தப்பி ஓடிவிட்டனர். இப்பொருள்கள் தோப்புத்துறையிலுள்ள விசேஷ போலிஸ் கோஷ்டி இன்ஸபெக்டரிடம் ஒப்படைக்கப்பட்டன. அதே தினத்தன்று மாலை கோடிக்கரையிலுள்ள கனகார் மடத்திலிருந்து இதே மாதிரி பொருள்கள் கண்டு பிடிக்கப்பட்டு வேதாரண்யம் போலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டன.

வேதாரண்யம் போலிஸ் சப் இன்ஸபெக்டர் ஸ்ரீ அய்யம்பெருமாள் கான்ஸடபிள்களுடன் ஸ்தலத்திற்குச் சென்று சந்தேகத்தின் பேரில் 13 பேரைக் கைது செய்தார்.

மேற்கு பாஞ்சால, எல்லைப்புற முஸலிம் அல்லாதார்

19 லட்சம் பேர் கிழக்கு பாஞ்சாலம் வந்தனர்

ஜலந்தர், அக் 16

மேற்குப் பாஞ்சாலத்திலும் எல்லைப்புறத்திலுமுள்ள 39 லட்சம் முஸலிம் அல்லாதாரில் 19 லட்சம்பேர் பாக்கிஸதான் எல்லையைக் கடந்து கிழக்குப் பாஞ்சாலம் வந்து சேர்ந்துவிட்டனர் என்று இங்கு அதிகார பூர்வமாகத் தெரிகிறது.

பாக்கியுள்ள 20 லட்சம் பேரில் 17 லிருந்து 18 லட்சம் பேர்வரை பாக்கிஸதானிலுள்ள 110 அகதி முகாம்களில் இருந்து வருகின்றனர். இரண்டு அல்லது 3 லட்சம் பேர் இன்னும் அவர்கள் வசிக்குமிடங்களிலேயே இருந்துவருகின்றனர்.

இலங்கை இந்தியா பிரச்னை

இன்னும் சில மாதங்களில் சமரச முடிவு ஏற்பட்டுவிடும்

சென்னையில்திரு.கிரி கூறியவிவரம்

சென்னை, அக். 18

இலங்கையிலுள்ள இந்திய சர்க்காரின் பிரதிநிதி திரு. வி. வி. கிரி கொழும்பிலிருந்து டில்லிக்குப் போகும் மார்க்கத்தில் இங்கு தங்கினார். அவரைப் பத்திரிகாநிருபர் பேட்டிகண்டபோது பின்வருமாறு தெரிவித்தார்:-

இலங்கை-இந்தியா பிரச்னை வெகு நாட்களாக இதுவரை தீர்க்க முடியாததோர் பிரச்னை போன்று இருந்து வந்தது. ஆனால் இரு தரப்பாரும் உண்மையான சமரசத்தை விரும்புவார்களேயாகில் இப் பிரச்னை மிக சுலபமாகத் தீரக்கூடியதொன்றாகும். இரு தரப்பாரிடையேயும் இப்பொழுது உண்மையான சமரசத்துக்கு வர வேண்டுமென்ற ஆவலிருப்பதால் இன்னும் சிலமாதங்களில் இலங்கை-இந்தியா பிரச்னையில் மிக சுலபமாக சமரசம் ஏற்படும். சென்ற மூன்று மாத காலத்தில் அப்படிப்பட்ட சமரசம் ஏற்படுவதற்கு வேண்டிய பூர்வாங்க வேலைகள் செய்து முடிக்கப்பட்டிருக்கின்றன. இலங்கை ராஜ தந்திரிகள், குறிப்பாக இங்கை பிரதம மந்திரியும் இலங்கைப் பொது ஜனங்களும் இலங்கை-இந்தியா பிரச்னை சமரசமாகமுடிவுற வேண்டுமென்று ஆவலுள்ளவர்களாக இருக்கிறார்கள். இரு நாடுகளின் நலன்களை முன்னிட்டு, இருநாடுகளுக்கு மிடையே கலாச்சாரம், பொருளாதாரம். அரசியல் இவை சம்பந்தமாக நெருங்கிய தொடர்பும் நேசபான்மையும், ஒத்துழைப்பும், இருக்க வேண்டுவது அவசியமாகும்.

திரு. கிரி சென்னையில் தங்கியிருந்துவிட்டு அக்டோபர் 23-ந் தேதி யன்று டில்லிக்குப் புறப்பட்டுச் செல்கிறார். டில்லியில் திரு. கிரி, இந்தியா மந்திரியும் வெளிநாட்டு மந்திரியுமான பண்டித ஜவஹர்லால் நேருவுடன் இலங்கை-இந்திய பிரச்னைப் பற்றிக் கலந்து பேசுவார். இலங்கை பிரதம மந்திரியும் இந்தியா பிரதம மந்திரியும் டில்லியில் சந்தித்து இது விஷயமாகப் பேசப் போவதால் இச்சந்திப்பு பற்றியும் திரு. கிரி முன்னதாகவே இந்தியா பிரதம மந்திரியுடன் கலந்து பேசுவார். டிசம்பர் கடைசி வாரத்தில் பண்டித நேருவை டில்லி வந்து சந்தித்துப் பேச விரும்புவதாக ஏற்கனவே இலங்கை பிரதமர் திரு. டி. எஸ். சேனநாயக்கா பண்டித நேருவுக்குத் தகவல் அனுப்பிவிட்டார், (அ-பிரஸ)

சென்னையில் ரூ. 1,50,000 திருட்டு

ஸ்ரீ கேவல்ராம் வீட்டில் களவு

சென்னை, அக். 17

நுங்கம்பாக்கத்திலுள்ள ஸ்ரீ கேவல்ராம் செல்லாராம் வீட்டிலிருந்து நேற்றிரவு ரூ. 1,50,000 பெறுமான ரொக்கமும் நகைகளும் திருட்டுப் போய் விட்டதாகச் சொல்லப்படுகிறது.

மாடியில் ஜன்னல் கம்பிகளை அகற்றிவிட்டு திருடர்கள் உள்ளே புகுந்திருக்கிறார்கள். போலிசார் தீவிரமாகப் புலன் விசாரித்து வருகின்றனர்.

சென்னையில் திருடர் கூட்டம்

சென்னை, அக். 17

சென்ற சில வாரங்களாக விசேஷமாக சென்ற 10 தினங்களாக சென்னையில் கொள்ளைக் கூட்டம் ஒன்று மிகவும் சுறுசுறுப்பாக இருக்கிறது. இக் கூட்டத்தினரைச் சந்திக்க போலிஸார் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

சென்ற வாரம் தண்டையார் பேட்டையில் ஒரு வீடு உடைக்கப்பட்டது. இன்னும் இரு இரவுகளில் அநேக தெருவில் திருட்டுகள் நடந்தன. பழைய மாம்பலத்தில் திருட்டுகள் நடந்ததாகவும் அறிவிக்கப்படுகிறது.

கண்ணாடித் தொழில் நிபுணருக்குப் பிரியாவிடை

கொழும்பு, அக் 20

சர்க்கார் கண்ணாடித் தொழிற்சாலை நிபுணரும் மானேஜருமான திரு என். பி. ஒகலா என்பவர் அவரது வேலை ஒப்பந்த காலம் முடிவடைந்ததால் திரும்பவும் தமது தாய் நாடு செல்வதை முன்னிட்டு அவருக்கும் அவரது பாரியாருக்கும் ஒரு பிரியாவிடை அந்த தொழிற் சாலை உத்தியோகஸ்தர்கள் தொழிலாளர்-சிப்பந்திகள் முதலியோரால் அளிக்கப்பட்டது மேலும் கருங்காலியில் செய்யப்பட்ட ஒரு மின்சார விளக்கும் அவருக்குப் பரிசாக அளிக்கப்பட்டது. அதில் அழகிய வேலைப்பாடுகளுடன் ஸ்ரீ லங்கா என்னும் எழுதுப் பொறிக்கப்பட்டுள்ளது.

'இந்தியருக்கு தனி மாகாண மேனும் தருக'

நிற வெறியை ஒழிக்க இதுவே வழி

தென் ஆப்பிரிக்க வெள்ளையருக்கு ஸ்ரீ. கான் யோசனை

லண்டன், அக். 16

"தென் ஆப்பிரிக்காவிலுள்ள ஐரோப்பியர் அங்குள்ள இந்தியரோடு ஒத்துவாழ மறுத்தால் நேட்டாலை இந்தியருக்கென சுதந்திர மாகாணமாக்க வேண்டும்" என்று லண்டனிலுள்ள இந்திய தொழிலாளர் சங்கத்தின் தலைவர் ஸ்ரீ. சவுத்ரி அக்பர் கான் ஒரு அறிக்கையில் கூறுகிறார்.

அவர் மேலும்கூறுவதாவது: தென் ஆப்பிரிக்காவின் நிற வெறிக் கொள்கை மனுஷ மேம்பாட்டுக்கே புறம்பானது. இதைக் கண்டித்த நேசதேச ஸ்தாபனத்தின் அதிகாரத்தைக் கூட உதறிக்தள்ள தயாராயிருக்கிறார் ஜெனரல் ஸ்மட்ஸ். இதைக் கண்டித்தாக வேண்டும்,

தென்னாப்பிரிக்க இந்தியர் பிரச்னை

ஐக்கியதேசஅசெம்பிளிக்கு மகாத்மா எச்சரிக்கை

புதுடில்லி, அக். 17

"தென் ஆப்பிரிக்கா-இந்தியா தகராறில் ஐக்கிய தேச ஸ்தாபனம் நேர்மையாகநடந்துகொள்ளத் தவறினால், அந்த ஸ்தாபனம் அதன் கௌரவத்தைஇழந்துவிடும். ஐக்கிய தேச ஸ்தாபனம் நேர்மையாக நடந்து கொண்டால் தான் அது முன்னேற முடியும் என்பதில் எனக்கு சந்தேகமே கிடையாது" என்று மகாத்மாகாந்தி, இன்று அகில இந்திய ரேடியோ நிருபர் கேட்ட பல கேள்விகளுக்கு பதிலளிக்கையில் கூறினார்.

'காஷ்மீர் டைம்ஸ்' ஆசிரியர் கைது

ஸ்ரீ நகர், அக். 17

'காஷ்மீர் டைம்ஸ்' என்ற ஆங்கில பத்திரிகையின் ஆசிரியரான ஸ்ரீ அப்துர் ரஹ்மான் மைத்தனும், அவரது காரியதரிசி ஸ்ரீ ஜி. கே. ரெட்டியும் காஷ்மீர் எல்லைக்குள் நுழையு முன் டொமெல் என்ற இடத்தில் சமஸ்தான அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனரென்று இங்கு தகவல் கிடைத்திருக்கிறது.

விமான நிலையத்தில் சைக்கிள் ஓட்டப் பந்தயங்கள்

கொழும்பு, அக். 19

ரத்மலானை விமான நிலையத்தில் இன்று காலை 10—30 மணிக்கு மோட்டர் சைக்கிள், சைக்கிள் ஓட்டப் பந்தயங்கள் நடைபெறும். 1000 மீட்டர்கள் சைக்கிள் ஓட்டப் பந்தயத்தில் ஒரே ஒரு பெண்மணியே போட்டியிடுகின்றார்.

இலங்கை-தென்னிந்தியா விமானப் போக்கு வரத்து

ஒரே நாளில் கொழும்பிலிருந்து,காங்கேசன்துறை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி சென்று திரும்பிய 'சுனித்ராதேவி'

ஒழுங்கான போக்குவரத்து நடத்த இலங்கை சர்க்கார் தீர்மானம்

மதுரை, அக். 19

இலங்கை சர்க்கார் விமான இலாக்காவின் 'ஏயர் சிலோன்' விமான சர்வீஸைச் சேர்ந்ததும் 21 பேர்கள் பயணம் செய்யக் கூடியதுமான 'சுனித்ரா தேவி' என்னும் விமானம் கொழும்பிலிருந்து புறப்பட்டு காங்கேசன்துறை, திருச்சி மார்க்கமாக மதுரை வந்து சேர்ந்தது. இந்த விமானம் கொழும்பிலுள்ள ரத்மலானை விமான நிலையத்திலிருந்து இன்று காலை 7 மணிக்குப் புறப்பட்டு காங்கேசன்துறை வழியாக திருச்சிக்கு பகல் 10-05 மணிக்கு வந்தது திருச்சியில் சிறிது நேரம் தங்கி அங்கிருந்து புறப்பட்டு மதுரைக்கு பகல் 11-40 மணிக்கு வந்து சேர்ந்தது. இந்த விமானம் இரு ஸதிரீகள் உட்பட 18 பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு வந்தது.

அந்த விமானத்தில் வந்த ஸ்டேஷன் ஆபீஸர் திரு டி சில்வா பத்திரிகா நிருபரிடம் பின்வருமாறு தெரிவித்தார்:— இலங்கைக்கும் தென்னிந்தியாவுக்கும் விமானம் ஒழுங்கான போக்குவரத்து நடத்த இலங்கை சர்க்கார் திட்டம் வகுத்து வருகிறார்கள். கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்கும் தென்னிந்தியாவிலுள்ள பல முக்கியமான நகர்களுக்குமிடையே இந்த விமானப் போக்குவரத்து நடைபெறும். இப்பொழுது இந்த விமானம் பரீட்சார்த்தமாகப் பறந்து வந்திருக்கிறது. இன்னும் கால அட்டவணைப்படி ஒழுங்கான விமான சர்வீஸ் ஆரம்பிக்கப்படவில்லை. ஆனால் கொழும்பிலிருந்து காங்கேசன்துறை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி வரை ஒழுங்கான விமானப் போக்குவரத்து நடத்த இப்பொழுது முடிவுசெய்யப்பட்டிருக்கிறது. இந்த விமானப் போக்குவரத்துப் பாதையில் ஏராளமான பிரயாணிகள் பயணம் செய்வார்களென்று இலங்கை சர்க்கார் எதிர்பார்க்கிறார்கள்.

இந்த இலங்கை விமானம் 'சுனித்ரா தேவி' மதுரையிலிருந்து திருநெல்வேலிக்குப் புறப்பட்டுச் சென்றது. அங்கு ஒரு விமான நிலையம் அமைப்பது பற்றி ஆராய்ந்து பார்த்துவிட்டு விமானம் அங்கிருந்துபுறப்பட்டு திருச்சிக்குத் திரும்பியது. திருச்சியிலிருந்து பகல் 2-20 மணிக்குப் புறப்பட்டு கொழும்புக்குப் பயணமாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜப்பானியர் பிரிட்டிஷாரை மதிக்கவில்லை

'உடனே பிரிட்டன் ஜப்பானிலிருந்து வெளியேறுக

கிண்டல் செய்யும் "சிக்காகோ டிரிபியூன்"

சிக்காகோ, அக். 17

இன்று வெளியான சிக்காகோ டிரிபியூனில் "பிரிட்டிஷார் ஜப்பானிலிருந்து உடனே நடையைக் கட்டிவிட வேண்டும்" என வற்புறுத்தி எழுதப்பட்டுள்ளது. ஆஸ்திரேலிய ராணுவ மந்திரி திரு சிரில் சேம்பர்ஸ் ஜப்பானிலிருந்து பிரிட்டிஷ் துருப்புகள் வாபஸ் வாங்கும் என விடுத்த அறிக்கை சம்பந்தமாக எழுதும்போதே மேற்படி பத்திரிகை இங்ஙனம் கூறியுள்ளது.

"பிரிட்டிஷ் ராணுவத்தைக் காணும்போதெல்லாம் ஜப்பானியர்களுக்கு சிங்கப்பூரில் எண்ணாயிரம் பிரிட்டிஷ் ஆஸ்திரேலியத் துருப்புகளை ஜப்பானியத் துருப்புகள் சிறைப்பிடித்த கதை ஞாபகத்திற்கு வரும். பிரிட்டிஷ் போர் வீரனைப் பார்க்கும் போதெல்லாம் 'இதோ, இவனை எம்மால் உதைக்க முடியும். முன்னர் உதைத்தும் இருக்கிறோம்' என்று ஜப்பானியன் எண்ணுவான்.

இந்தக் காரணத்தால் 80 லட்சம் ஜப்பானியர்களை அடக்கிவைத்துப் பரிபாலனம் செய்வதில் மக்ஆர்தருக்கு பிரிட்டிஷ் துருப்புகளால் எவ்வித நன்மையும் கிடையாது. அமெரிக்கத் துருப்புகளும் சிறிய தொகையாய் இருந்தால் என்ன, ஜப்பானியர் அவர்களிடம் மதிப்பு வைத்திருக்கிறார்கள். ஏனெனில் அவர்களின் தோழர்களே ஜப்பானிய ராணுவ பலத்தை துவம்ஸம் செய்த வீரர்களாவார்கள்." (ராய்ட்டர்)

அமெரிக்காவின் முடிவான பதில் எப்போ?

இந்தியாவின் உணவுக் கோரிக்கை

வாஷிங்டன், அக். 18

அமெரிக்க அரசாங்க இலாகா சார்பில் பேசிய ஒருவர் 'இந்தியா சரித்திரத்திலேயே மிகவும் நெருக்கடியான தனது உணவுச் சட்டத்தைச் சமாளித்துக் கொள்வதற்கு கோதுமை முதலிய தானியங்கள் கேட்டிருக்கிறது. இதற்கு விவசாய மந்திரி முடிவான பதிலை எப்போ கொடுக்கக் கூடியதாய் இருக்கும் என ஹேஷ்யங் கூற முடியவில்லை' எனக் குறிப்பிட்டார்.

ஆனால் இந்திய ஸதானிகர் ஆஸப் அலி இது சம்பந்தமாக செய்த வேண்டுகோள் மிக தயாளத்துடன்கவனிக்கப்பட்டு வருகிறது எனவும் அவர் குறிப்பிட்டார். 'ஆனால் இந்தியா ஐரோப்பிய நாடுகள்-முக்கியமாக பிரான்சும் இத்தாலியும் உணவுக்காக வாடிக்கேட்கும் தருணத்திலே தனது கோரிக்கையைச் செய்துள்ளது' எனவும் அவர் குறிப்பிட்டார். (ராய்ட்டர்)

9 கம்யூனிஸ்டுகள்மீது ராஜத்துவேஷ வழக்கு

ஆப்பிரிக்க சர்க்கார் கைவிட்டது

தேரிகளில் ஒருவர் இந்தியர்

ஜோஹன்னஸ்பர்க், அக். 17

ஹாரி அலிமொது நாயுடு என்னும் இந்திய சத்தியாக்கிரகத் தலைவர் உள்ளிட்ட ஒன்பது அமெரிக்க கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர்கள் மீது ராஜத் துவேஷக் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் குற்றச்சாட்டுகளை ரத்தாக்கி ஆரம்ப விசாரணையை மீண்டும் செய்யவேண்டும் என உத்தரவிடப்பட்டது.

ஆரம்ப விசாரணை இன்று தொடங்கியபோது அட்டார்னி ஜெனரல் விசாரணையைத் தொடர்ந்து நடத்த வேண்டியதில்லை என உத்தரவிட்டுள்ளதாகக் கூறப்பட்டது. (ராய்ட்டர்)

சிங்களப் பத்திரிகை எழுதுவது:

சிங்களக் கொடி மீது சீற்றமேன்?

வட இலங்கையிலிருந்து வீசிய சூறுவளி

தமிழ் மக்கள் மீது ஒரு சிங்களப் பத்திரிகையின் ஆத்திரம்

சுகாதார-ஸதல ஸதாபனமந்திரியும், சிங்கள மகாசபைத் தலைவருமான திரு. பண்டார நாயக்காவின் "சிங்கள பலய" எனும்பத்திரிகையில் 18உ உள்ள கட்டுரையின் தமிழாக்கம்:

புஜபல பராக்கிரமம், போர்த் திறமை, ராஜ தந்திரம், திக்விஜயம், தேசிய விமோசனம், அபயம், அகிலக் கௌரவம் ஆகிய உயர்ந்த கருத்துக்களையுடையதும், உலகத்திலேயே மிகவும் புராதனமானதுமான எங்கள் தேசியக் கொடியான கையில் வாளேந்திய சிங்கக் கொடியை பார்லிமெண்ட் அரங்கேற்று விழாவில் தேசியக் கொடியாக அரசாங்கக் கட்டிடங்களில் பறக்க விடப்படுமென்று நிச்சயமாகவே எதிர்பார்க்கப் பட்ட போதிலும், அது விஷயம் ஏமாற்றத்தைக் கொடுத்ததோடு புதிய சர்ச்சைகளும் கிளம்பியிருக்கின்றன.

பார்லிமெண்டு அரங்கேற்று விழாவில் உபயோகிப்பதற்கென்றே ஐம்பதினாயிரம் சிங்கக் கொடிகளை வரவழைக்கப் பட்டது உண்மைதான். ஆனால், 'அந்த சிங்கக் கொடிகளை தேசியக் கொடியாக உத்தியோக தோரணையில் உபயோகிப்பதற்கல்ல வென்றும், அவைகளை மற்றக் கொடிகளோடு அலங்காரத்திற்காகவே அரசாங்கக் கட்டிடங்களில் உபயோகிக்கப் படுமென்றும்' தபால்-தந்தி இலாக்கா மந்திரி திரு. சிற்றம்பலம் கூறியிருக்கிறார்.

சிங்கக்கொடி இலங்கையின் தேசியக் கொடியல்ல வென்றும், தேசியக் கொடி சம்பந்தமான பிரச்னையை பார்லிமெண்டே முடிவு செய்யுமென்றும் எங்கள் பிரதம மந்திரி திரு டி. எஸ். சேனநாயக்கா கூறியிருக்கிறார். ஆனால், இலங்கையை பராதீனத்திற்குள்ளாக்கி, அன்று கண்டியில் ராஜமாளிகையில் பறந்து கொண்டிருந்த சிங்கக் கொடியை இறக்கியவர்களைக் கொண்டே மறுபடியும் சிங்கக் கொடியை உயர்த்துவோம் என்று சிங்களவர் அடங்கிய கூட்டத்தில் உறுதி கூறியவரும் திரு. சேனநாயக்காதான்.

இந்த சர்ச்சைகளுக்குக்காரணமென்ன? நம் தலைவர்களின் மனமாற்றத்திற்குக் காரணமென்ன? அதாவது இலங்கையின் தேசியக் கொடியாக சிங்கக் கொடியை உயர்த்தப் போகும் செய்தி பரவியதுதான் தாமதம், உடனே வட இலங்கையிலிருந்து பிரசண்டமான சூறுவளி வீசியது. இலங்கையின் தேசியக் கொடியாக சிங்கக் கொடியை உயர்த்தக் கூடாதென்று வடஇலங்கையிலிருந்து பிரதம மந்திரிக்கு தந்திச் செய்திகள் கிடைத்தன. இந்தச் சூறுவளியினால் வாளேந்திய சிங்கக் கொடியை கையில் வைத்துக் கொண்டிருந்த எங்கள் பிரதம மந்திரியார் மறுபக்கம் திரும்பி விட்டார்.

எனினும், இவைபோன்ற சூறுவளிகள் என்றும் எப்பொழுதும் வட இலங்கையிலிருந்து எதிர்பார்க்கப்படுவதுதான். பொன்னம்பலம் மகாராஜாவாய் இருக்கும் யாழ்ப்பாணத்தில் இவை போன்ற எத்தனையோ சூறுவளிகளையும் இன்னும் எதிர்பார்க்கலாம்.

யாழ்ப்பாணத்தொகுதி தேர்தல் நடந்த தினத்தன்று பின்னேரம் தனது ஆதரவாளர்கள் முன்னிலையில்பேசுகையில், தேர்தலில்திரு. மகாதேவாவெற்றியடைந்தால் எல்லாச் சிங்களவர்களையும் தம்பட்டமடித்து துரத்துவோ மென்றும், அடுத்த தினம் இன்னுமோரிடத்தில் பேசுகையில் பார்லிமெண்டு ஆரம்பதினத்தன்றே, அதற்கு முன்னரோ பின்னரோ யாழ்ப்பாணத்தில் இருக்கிற சிங்களவர்கள்சிங்கக்கொடியை உயர்த்துவார்களானால் அவர்களை அடித்து உதைத்து தெற்கே துரத்துவோம் என்றும் திரு. பொன்னம்பலம் கூறியதாக யாழ்ப்பாணத்தில் இருக்கிறசிங்களவரொருவர் அனுப்பிய நீண்ட கடிதமொன்று எங்கள் கையில் இருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் ஆங்காங்கே சிறு தொழில்களில் ஈடுபட்டிருக்கும் சிங்களவர்களை தம்பட்டம் அடித்து தெற்கே துரத்துவது எப்படியானாலும், அவர்களுக்கு சிறிதேனும் கண்ணியமின்றி நடந்து கொண்டாலும், காடு மேடுகளிலும் நகரங்களுக்குக்கிராமங்கள் கடைச்சந்திகள் தோறும் இந்தியக் கொடியையேற்றி க்ஷயரோக பந்தம் விற்று வடக்கே பணத்தை பொதிகட்டி அனுப்புவதில் ஈடுபட்டிருக்கும் புண்ணிய சீலர்கள் சம்பந்தமாக எடுக்கப்படும் நடவடிக்கைகளின் பிரதிபலனை காண நேரிடுமென்பது திண்ணம்.

அதுதான் எப்படியாயினும், யாழ்ப்பாணத்தில் சிங்களக் கொடியை ஏற்றினாலும், ஏற்றாவிட்டாலும், யாழ்ப்பாணத்தில இருக்கும் சிங்களவர்களை அடித்து உதைத்து தெற்கே அனுப்பினாலும் அனுப்பாவிட்டாலும், யாழ்ப்பாணத்தவர்கள் எதிர்த்தாலும் எதிர்க்காவிட்டாலும், யாழ்ப்பாணமே ஆழ்ந்த கடலால் சூழப்பட்டாலும் சூழப்படாவிட்டாலும், வீரஞ்செறிந்தசிங்கக்கொடியை சும்மாஅலங்காரம்செய்யும்கொடியாகபாவிக்க ஒருபொழுதும் இடம் கொடோம். மரணக் கிரியைகளுக்கும் தானம் கொடுக்கும் (பான்ஸகல) முழத்துணியாகவும் விடமாட்டோம். பழைய கந்தைத் துணியாய்ப் போய்விடவும் விடமாட்டோம்.

இருபத்துநாலு நாற்றாண்டுகளாக தேசாதி தேசங்கள் தோறும் இருந்த சிங்கள ஸதானிகர்களின் காரியாலயங்களிலும், மந்திராலோசனைச் சபைகளிலும், ஆஸதான மண்டபங்களிலும், அரசர்களின் கூட கோபுரங்களிலும், தேசாதி தேசங்களில், நிகழ்ந்த யுத்தங்களிலும் பஞ்ச சமுத்திரங்களிலும் திக் விஜயம் செய்த படைக் கப்பல்களின் கொடி மரத்திலும், சீனத்திலிருந்து ரோமாபுரி வரைக்கும், கிழக்கு நாடுகளிலிருந்து பெருநாடுவரைக்கும் வர்த்தகத் துறையில் சேவை செய்த சிங்கள வர்த்தகக் கப்பல்களிலும், உலகத்திலேயே மிகவும் பழமை பொருந்திய தேசியக் கொடியான சிங்கக் கொடியேதான் மறுபடியும் இன்று நமது தேசியக் கொடியாய் இருக்க வேண்டும். மறுபடியும் அந்த வீரஞ் செறிந்த சிங்கக் கொடியின் குளிர்ந்த நிழலில் இலங்கை திகழ வேண்டும். மறுபடியும் இலங்கையின் வானை எட்டிப் பார்க்க வேண்டும்.

நமக்குக் கிடைக்கப்போகிற சுதந்திரத்திற்கு நஷ்ட ஈடாக எங்கள் வணக்கத்துக்கு பாத்திரமான பரிசுத்தமான தேசியக் கொடியை அழியவிட்டால், அந்த சுதந்திரத்தை நாய்க்கே விட்டுவிட வேண்டும். சிங்கக் கொடியின் குளிர்ந்த நிழலிலேயன்றி, வேறு எந்தக் கொடியின் நிழலிலேயும் சுயமரியாதையும் சாகியாபிமானமும் தேசாபிமானமும் உள்ள எந்தச் சிங்களவனும் ஜீவிக்க மாட்டான்.

எனினும், எங்களுடைய மற்ற புராதன வஸ்துக்களைப் போன்று எங்கள் தேசியக் கொடியையும் வட இலங்கையில்இருந்துவரும்சூறுவளிக்குள் அகப்பட்டு கிழிந்து போகும் நிலைமை உண்டாகி யிருப்பதாகத் தெரிகிறது. இது சம்பந்தமாக-தேசியக்கொடி பிரச்னை-என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்பதை ஆலோசிக்க இம்மாதம் 25-ம் தேதி கொழும்பு நகரசபை மண்டபத்தில் ஒரு பகிரங்க பொதுக்கூட்டம் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது.

கைமோசக் கொலைக்கு நான்கு வருடச் சிறை

'மரவள்ளி' தகராறு மரணத்தில் முடிந்தது

கொழும்பு, அக் 19

கம்பஹா பகுதியில் லின்டுரா என்னுமிடத்தில் கடந்த பெப்ரவரி 18-ம் தேதி யன்று எம். ஜம்மா [18வயது] என்பவரை கொலைசெய்ததாக எம். பீட்டர் [வயது 20] என்பவர் மீது குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு கொழும்பு அசைஸ கோர்ட்டில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இவ்வழக்கின் விசாரணையின் போது, மரவள்ளி சம்பந்தமாக ஏற்பட்ட கலவரத்தில் ஜம்மா என்பவரை பீட்டர் ஒரு கட்டையால் தாக்கியதாக கூறப்பட்டது. எதிரி கைமோசக் கொலை புரிந்ததாக ஒப்புக் கொண்டதன் மேல் நீதிபதி எதிரிக்கு நான்கு வருடச் சிறைத்தண்டனை விதித்தார்.

அர்பன் சபை மின்சார இலாகாவுக்கு ஓவர்ஸியர்

திரு எஸ். அரியரத்தினம் நியமிக்கப்பட்டார்

யாழ்ப்பாணம், அக். 18

யாழ்ப்பாண அர்பன் சபைக் கூட்டமொன்று சபை மண்டபத்தில் திரு ஸி. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்றபோது மின்சார இலாகாவுக்கு ஓவர்ஸியர், உதவி லைன்ஸ்மென் முதலியவர்கள் நியமிக்கப்பட்டனர். ஓவர்ஸியராக திரு. எஸ் அரியரத்தினமும், உதவி லைன்ஸ்மெனாக திரு. டி. சோமசுந்தரமும் நியமிக்கப்பட்டனர். வேறும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

விதானையார் அடித்தாரா?

நெடுந்தீவு, அக். 17

நெடுந்தீவு கிழக்கு கிராம விதானையார் நாகலிங்கம் சுவாமி நாதன் என்பவர் அதே ஊரைச் சேர்ந்த தனுக்கோடி சுவாமிநாதன் என்பவரை அடித்துக் காயப்படுத்தினாரெனக் குற்றஞ் சாட்டி ஊர்காவற்றுறை மாஜிஸ்டிரேட்கோர்ட்டில் ஓர் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது, மாஜிஸ்டிரேட் எதிரியாகிய விதானையாரை ரூ. 400 பிணையில் விட்டு விசாரணையை 23-ம் தேதிக்கென ஒத்திவைத்தார். (ந-நி)

நெல்லுக் கடத்தியவருக்கு ரூபா 50 அபராதம்

சாவகச்சேரி, அக். 17

நுணாவில் வாசியாகிய வி, கனகசபை என்பவர் 28 கொத்து நெல்லு உத்தரவுச் சீட்டின்றிக் கொண்டு சென்றார் என்று பளை கருமாதிகாரி [டி. ஆர். ஓ] யால் தொடரப்பட்ட வழக்கு இன்று சாவகச்சேரிக் கோர்ட்டில் விசாரணைக்கு எடுக்கப்பட்டு விசாரணை முடிவில் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு நெல்லையும் பறிமுதலாக்கி ஐம்பது ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. [ந-நி]

யாழ்ப்பாணக் கல்லூரியில் பாரதி விழாக் கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், அக். 18

யாழ்ப்பாணக் கல்லூரியில் இம்மாதம் 4-ம் தேதி வரகவி பாரதியாரின் தினம் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. பிரதம ஆசிரியர் திரு. ஏ. செல்லையா கவிபாரதியின் உருவப்படமொன்றைத் திறந்து வைத்துப் பேசுகையில் யாழ்ப்பாணக்கல்லூரியில் இத்தகைய விழாக்கள் கொண்டாடப்பட வேண்டுமென்று குறிப்பிட்டார். கவிபாரதியின் வாழ்க்கைபற்றியும் அவரது பாடல்கள்பற்றியும் டலர் சொற்பொழிவு வாற்றினார்கள்.

பெண் கடத்து வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது

எதிரிகளை நீதிபதி விடுதலை செய்தார்

கொழும்பு, அக் 19

ஜம்புகாஸமுல்ல டெண் கடத்து வழக்கு கொழும்பு அசைஸ கோர்ட்டில் நேற்று முன்தினம் பிரதம நீதிபதி முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. இவ்வழக்கில் கடந்த நவம்பர் 4-ம் தேதி ஜம்புகாஸமுல்ல என்னுமிடத்தில் உள்ள சுமன பீரிஸ என்னும் பெண்ணை, [விவாகமாகி கணவனைப் பிரிந்திருக்கும்] பி. சைமன் கூரே என்பவர் கடத்திச் சென்றாரவும் அவருக்கு உடந்தையாக எம். பி. அல்பர்ட், பி. எம். ஏ பி. ஜெயசேகரா ஆகிய இருவரும் இருந்ததாகவும், முதல் எதிரி அப்பெண் மீது பலாத்காரப்பிரயோகம் செய்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

விசாரணையின் போது பிராஸிக்கியூஷன் தரப்பில் வழக்கை மேற்கொண்டு நடத்த விருப்பமில்லையென்று தெரிவிக்கப்பட்டது. நீதிபதி எதிரிகளை விடுதலை செய்தார்.

கத்தியால் குத்திக் காயம் விளைத்தவருக்கு

மூன்று மாத மறியலும் ஏழு அடியும்

சாவகச்சேரி, அக். 18

மட்டுவில் வடக்கு மயிலன் கிட்டினன் என்பவன் ஐயங்கண் முருகனுக்குக் கத்தியால் குத்திக் கடுங்காயம் வருவித்தானென்று தொடரப்பட்ட வழக்கு இன்று சாவகச்சேரிப் போலிஸ கோர்ட்டில் விசாரணைக்கெடுக்கப்பட்டு விசாரணை முடிவில் எதிரியைக்குற்றவாளியாகக்கண்டு நீதிபதி எதிரிக்கு மூன்றுமாத மறியலும் மறியலால் வீடுதிரும்பும் பொழுது ஏழு அடியும் குற்றம் விதித்தார் (ந-நி)

தென்னை தொழிலுக்கு ஒரு மந்திரி

சிலாபதோட்டமுதலாளிகள் கூட்டத்தில் தீர்மானம்

கொழும்பு, அக். 19

சிலாபம் — நீர்கொழும்பு தோட்ட முதலாளிகள் சங்கப் பொதுக் கூட்டமொன்று வியாழக்கிழமை நடைபெற்றது. இக் கூட்டத்தில் தென்னைத் தொழில் ஒரு தனி மந்திரியின் கீழ் விடப்பட வேண்டுமென்று விவாதிக்கப்பட்டது. இது பற்றி விரிவாக ஆராய ஒரு உப கமிட்டி நியமிக்கப்பட்டது.

வீட்டில் புகுந்து திருடினர்

சாவகச்சேரி, அக். 17

கிளிநொச்சி வாசியாகிய குழந்தை இராசு, தாசன் இராமசாமி என்னுமிருவர் திருமாலை என்பவர் வீட்டிற்குள் புகுந்து ரூபா முன்னூற்றைம்பது பெறுமதியான டிரங்குப் பெட்டியொன்றையும் இன்னும் வேறு சாமான்களையும் எடுத்ததாகத் தொடரப்பட்ட வழக்கு சாவகச்சேரிக் கோர்ட்டில் இன்று விசாரணைக்கு எடுக்கப்பட்டு விசாரணை முடிவில் எதிரிகளைக் குற்றவாளிகளாகக் கண்டு முடிக்குரிய செலவு ஐம்பது ஐம்பது ரூபாயும் ரூபா 500 ல் மூன்று வருடத்திற்கு நல்நடத்தைப் பிணையிலும் விடப்பட்டிருக்கின்றனர் (ந-நி)

மால்டெட் மில்க்கில் கொள்ளை லாபம்

எதிரிக்கு ரூ. 250 அபராதம்

கொழும்பு, அக், 19

புறக்கோட்டை டாம் ஸ்ட்ரீட்டைசேர்ந்த எம்.எஸ் ஹமீத் என்பவர் நெஸில்ஸ் மால்டெட் பால் டின்னை அதன் கட்டுப்பாட்டு விலை ரூ. 1-75 ஆக இருக்க அதனை ரூ, 3 க்கு விற்பனை செய்ததாக குற்றம் சாட்டி உணவுப் பொருள்-விலைக் கட்டுப்பாட்டு இன்ஸ்பெக்டர் திரு. கே. சிவப்பிரகாசத்தினால் கொண்டுவரப்பட்ட வழக்கு கொழும்பு பிரதம மாஜிஸ்டிரேட் திரு. மெர்வின் ஜோஸப் முன் விசாரணைக்கெடுக்கப்பட்டது. விசாரணை முடிவில் எதிரி குற்றவாளியெனக் கண்டு நீதிபதி எதிரிக்கு ரூ 250 அபராதம் விதித்தார்.



அற்புதமானது! ஆனந்தமளிப்பது!!

மனதிற்கு பரவசமும் உல்லாசமும் ஊட்டுவது

இப்படியாக பாலர் முதல் பெரியோர்வரை ஏகோபித்து புகழ்வதெல்லாம்

மேனகா மார்க் லொசிஞ்சர்களே!

மேனகா மார்க் லசிஞ்சர்கள் ஒவ்வொன்றிலும் தேகத்திற்கு வலிமை அளிக்க வல்லதும், இரத்த விருத்தியுண்டாக்குவதுமான குளுக்கோஸ் எனும் சத்து சேர்ந்திருக்கிறது. அத்துடன் மனதிற்கு நல்மணமும், நற்சுவையும் கொடுக்கக்கூடிய பழரசச் சத்தும் சேர்ந்து இதற்கென்றே இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட நிபுணர்களைக்கொண்டு சாஸ்திரமுறைப்படி தயாரித்து யாவருக்கும் எளிதில் கிடைக்கக்கூடிய விதத்தில் சரசமான விலையில் டின்களில் அடைத்து விற்கப்படுகின்றது.

மேனகா மார்க் லொசிஞ்சர்

எல்லா முக்கியவியாபாரிகளிடமும் கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:-

ராஜா இன்டஸ்ரியல் வேர்க்ஸ்,

71, புதிய சோனகத் தெரு, கொழும்பு.

Telegram: "SWEETS" Telephone: 2737

கீழ்க்காணும் வியாபாரிகளை நமது முக்கிய விநியோகஸதர்களாக நியமித்திருக்கிறோம்.

V. T. செல்லையா அன் கோ, குருநாகல்
K. முருகேசு அன் கோ, " "
மனோன்மணி ஸ்டோர், கேகாலை Kegalle.
W. E. M. பாக்ஷா சாகிப் அன் கோ, நாவலப்பிட்டி
N. B. அந்திரிஸ சில்வா அன் கோ, கம்பளை
M. சேகு அலி ராவுததர் அன் கோ, வத்துகாமம்
A. S. M. முகைதீன் அன் கோ, மாத்தளை
M. T. செல்லையா அன் கோ, கெக்கிராவ
K. சிவகுநாதப்பிள்ளை அன் சன்ஸ், யட்டியாந்தோட்டை
S. நாகமுத்து, ருவான்வெளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரெஞ்சு பிரதமர்-இந்திய ஹை கமிஷனர் சந்திப்பு

பர்மா-இந்தியா உடன்படிக்கை

பாக்கிஸ்தானில் அமெரிக்கர் ஆதிக்கம்!

பாரிஸ், அக். 18

லண்டனிலுள்ள இந்தியா ஹை கமிஷனர் திரு கிருஷ்ண மேனன் நேற்றிரவு பாரிசுக்குப் புறப்பட்டு வந்தார். அவரை இன்று பிரஞ்சு அந்நிய நாட்டு மந்திரி பிடால்ட் வரவேற்றார். திரு. கிருஷ்ண மேனன் திங்கட்கிழமையன்று பிரஞ்சு பிரதம மந்திரியைச் சந்தித்துப் பேசுவார். எதற்கு வந்திருக்கிறார் என்று தெரியவில்லை ஆனால் இந்தியாவிலுள்ள பிரஞ்சு பிரதேசங்களுக்கும் இந்திய சர்க்காருக்குமுள்ள தொடர்பைக் குறித்து கலந்து பேச வந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

திரு. சின்னதுரை பிரசங்கம்

விக்ஹாம், அக். 18

விக்ஹாம் கன்ஸர்வேடிவ்கள் சங்கக் கூட்டத்தில் இந்திய பாரிஸ்டரும் பத்திரிகாதிபருமான திரு. ஜே. சின்னதுரை பின்வருமாறு பேசினார்:- இந்தியாவில் இப்பொழுது ஏற்பட்டுள்ள குழப்பமான நிலைமை எதிர்பார்க்கப்பட்டதே. கூடிய சீக்கிரம் அமைதியேற்பட்டுவிடும். நாட்டின் ஜனத்தொகையில் பத்தில் ஒரு பங்கினரான வகுப்பாரரலேயே இந்தத் தொல்லைகள் எல்லாம் ஏற்பட்டன. பிரிட்டன் ஒழுங்கான நிலையில் வெளியேறாமல் திடீரென வெளியேறியது தவறு. நிலைமைகளைச் சரிப்படுத்த இந்திய சர்க்காரும் பாக்கிஸ்தான் சர்க்காரும் தீவிரமான வேலைகள் செய்துவருகிறார்கள்.

பர்மா ஹை கமிஷனர்

புதுடில்லி, அக். 18

இந்தியாவில் பர்மாவின் ஹை கமிஷனராக நியமிக்கப்பட்டுள்ள உவின் இன்று ரங்கூனிலிருந்து இங்கு வந்துசேர்ந்தார். இந்தியாவில் தற்சமயம் ஏற்பட்டுள்ள கஷ்டமான நிலைமைபற்றி பர்மிய மக்கள் கவலைகொள்கிறார்களென்றும் தங்களால் முடிந்த உதவியைச் செய்ய பர்மா மக்கள் ஆவலுடனிருக்கிறார்களென்றும் அவர் தெரிவித்தார்.

பர்மாவுடன்உடன்படிக்கை

பர்மா—இந்தியா உடன்படிக்கை சம்பந்தமாக கூடிய சீக்கிரம் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகும். பிரிட்டன் அனுப்பியதுபோல இந்தியா ஒரு தூதுகோஷ்டியை பர்மாவுக்கு அனுப்பவேண்டுமா என்று இந்திய சர்க்கார், பர்மா சர்க்காரைக் கேட்டிருக்கிறார்கள். ஆம்என்று பர்மா பதிலனுப்பியிருக்கிறது. லண்டனிலிருந்து பர்மா திரும்பும்பேரது பர்மா பிரதமமந்திரி தக்கின் நு டில்லியில் இறங்கி பண்டித நேருவைச் சந்தித்துப் பேசுவார்.

பாக்கிஸ்தானில் அமெரிக்க ஆதிக்கம்

நியூயார்க், அக். 18

பாக்கிஸ்தானில் அமெரிக்கர் மூலதனம் போட்டு ஆயில் கம்பெனி, சுரங்கங்கள், நீர்ப்பாசனத் திட்டங்கள் முதலியவற்றை ஏற்படுத்துவார்கள். அமெரிக்க நிபுணர்கள் இது சம்பந்தமாக பாக்கிஸ்தானுக்கு வருவார்கள். பலுசிஸதானத்திலும் காலாட் சமஸ்தானத்திலும் எண்ணெய்க் கிணறுகள் வெட்டவும் ஏற்பாடு செய்கிறார்கள். கராச்சியில் பாக்கிஸ்தான் அதிகாரிகளுடன் இது சம்பந்தமாக அமெரிக்க முதலாளிகள் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்கள்.

காஷ்மீர் மீது படையெடுப்பா?

ஸ்ரீநகர், அக். 18

பாக்கிஸ்தானைச் சேர்ந்த மேற்குப் பஞ்சாப்பின் எல்லையிலுள்ள காஷ்மீர் பிரதேசங்களான பூஞ்சிலும், மீர்பூரிலும் பாக்கிஸ்தானிலுள்ள முஸ்லிம்கள் ஆயுதபாணிகளாக படையெடுத்து வந்து குழப்பமுண்டாக்குவதாக காஷ்மீர் சர்க்கார் அறிக்கை தெரிவிக்கிறது. மேற்கு பஞ்சாப்பை அடுத்த ஜம்முவிலும் குழப்பம் உண்டாகும் போலிருக்கிறதென்றும் அவ்வறிக்கை கூறுகிறது.

ஹைதராபாத் சம்பாஷணை

புதுடில்லி, அக். 18

ஹைதராபாத் சமஸ்தான தூதுக்கோஷ்டி இன்று லார்டு மவுண்ட் பேட்டனைச் சந்தித்துப் பேசியது. நாளையும் பேச்சுக்கள் நடைபெறும். பேச்சுப் போக்கைக் கவனிக்குமிடத்து சமரசம் ஏற்படாதபோல் தெரிகிறது. முடிவு இன்னும் சில தினங்களில் தெரியும்.

கப்பல் கம்பெனிகள் மகாநாடு

இந்திய சர்க்கார் வர்த்தக மந்திரி நவம்பர் 3-ம் தேதியன்று டில்லியில் இந்தியக் கப்பல் கம்பெனிகளின்மகாநாட்டைக்கூட்டுகிறார். இந்தியக் கப்பல் வர்த்தகத்தைப் பெருக்குவதுபற்றியும் வெளி நாடுகளுடன் கப்பல் போக்குவரத்து நடத்த இந்தியக் கப்பல்களை அதிகரிப்பது பற்றியும் முடிவுகள் செய்யப்படும்.

ஆஸ்திரேலியாவுக்கு உணவு தூது

ஆஸ்திரேலியாவிலிருந்து 10 லட்சம் டன் கோதுமைவாங்க இந்திய சர்க்கார் மூன்று பேர்களடங்கிய ஒரு தூதுக் கோஷ்டியை ஆஸ்திரேலியாவுக்கு அனுப்புகிறார்கள். விஷ்ணு சாஹாய், நெவில்வாடியா, இந்தியா நிதி இலாக்கா அதிகாரி ஒருவர் ஆகிய மூவரும் அக்டோபர் 25-ம் தேதி புறப்பட்டுச் சென்று அங்கு மூன்று வாரங்கள் சுற்றுப் பயணம் செய்வர்.

நவம்பர் 10-ம் தேதிக்குள் பர்மா, ஆர்ஜன்டைன், ஆஸ்திரேலியா, அமெரிக்கா, கானடா, சயாம் ஆகிய நாடுகளிலிருந்து 3 லட்சம் டன் அரிசி, கோதுமை, மாவு ஏற்றிக்கொண்டு 70 கப்பல்கள் இந்தியாவுக்கு வந்து சேரும்.

'ரவீந்திர பாரதி'

கல்கத்தா, அக். 18

ஜோராசங்கோ வீதியுள்ள ரவீந்திரநாத் தாகூரின் பூர்வீக மாளிகை 'ரவீந்திர பாரதி' என்ற ஸ்தாபனத்திற்கு ஒப்புவிக்கப்பட்டது. இந்த ஸ்தாபனம் அகில இந்திய ரவீந்திரர் ஞாபகார்த்தக் கமிட்டியால் நிறுவப்பட்டிருக்கிறது. மற்றும் கல்கத்தாவிலுள்ள தாகூர் ஞாபகார்த்தப் பொருட்களையும் மேற்கு வங்க சர்க்கார் இந்த ஸ்தாபனத்திற்குக் கொடுத்துவிட்டார்கள். ரவீந்திரர் மாளிகையை இந்தியாவின் ஒரு பெரிய கலைப் பொக்கிஷமாகவும் சேவாதானமாகவும் ஏற்படுத்தப் போவதாகவும், அதில் கலாச்சாரப் பகுதி, தேசியப் பொருட் காட்சிசாலை, தேசிய சித்திரக் கலா கூடம், தேசிய நாடகஆராய்ச்சிசாலை, தேசப் புனருத்தாரண ஆராய்ச்சி சாலை, சர்வதேச கலாச்சார மண்டபம் இவைகள் அமைக்கப்படும் என்று ஞாபகார்த்தக் கமிட்டிக் காரியதரிசி தெரிவித்தார்.

தென்னிந்திய கலைப் பொருட்கள்

சென்னை, அக். 18

லண்டனிலுள்ள ராயல் அக்கடமி நடத்தும் இந்தியக் கலைப் பொருட் காட்சிக்கு இந்தியக் கமிட்டித் தலைவர் ஸ்ரீமதி சரோஜினி நாயுடு வேண்டுகோளின் மீது சென்னை சர்க்கார் தென்னிந்தியாவிலுள்ள கலைப் பொருட்களை லண்டனுக்கு அனுப்பிவைத்திருக்கிறது. அக்கலைப் பொருட்களில் ஒன்று பூர்வீகமான திருவாலங்காடு நடராஜா விக்ரகம் ஒன்றாகும்.

கானடாவின் பென்சிலின்

புதுடில்லி, அக். 18

பஞ்சாப் கவவரத்தில் கஷ்டப்படுகிறவர்களின் உபயோகத்திற்காக கானடா செஞ்சிலுவை சங்கத்தார் இந்தியா செஞ்சிலுவை சங்கத்தாருக்கு 2,80,000 யூனிட்டுகளுள்ள 93 பெட்டி பென்சிலின் மருந்து அனுப்பியிருக்கிறார்கள்.

"தேச முன்னேற்றம் வேண்டினால் வகுப்புவாதம், தற்பெருமையைக் கைவிட வேண்டும்"

கவர்னர் பேச்சு

கொழும்பு, அக். 19

"உயர்தரக் கல்வியால் பெறக்கூடிய உத்தியோகங்களும், குமாஸ்தா வேலைகளும் வருங்கால இளைஞர்கள் எல்லோருக்கும் கிடைப்பது மிகவும் கஷ்டம் என்பதை யாவரும் ஒப்புக்கொள்வர். ஒரு நல்ல சமூகத்தில் எல்லோரின் குறிக்கோளாக இருக்க வேண்டியதும் அவ்வுத்தியோகங்களுமல்ல; தொழிற் கல்வியையும் இயந்திரக் கல்வியையும் இத்தீவில் பெருக்கவேண்டும் இதற்கான சாதனங்கள் இன்னும் அதிகமாகப் பெருக்கிக் கொள்ளவேண்டும். அத்துடன் புதிய முறையில் விவசாயம், மிருக வளர்ப்பு முதலியவற்றில் பயிற்சி அளிக்கப்படவேண்டும்."

இவ்வாறு இலங்கை கவர்னர் ஸர் ஹென்றி மூர் சென்ற சனிக்கிழமை இரவு நடந்த சென்ட் தாமஸ் கல்லூரிப் பரிசளிப்பு விழாவில் தலைமை வகித்துப் பேசியபொழுது கூறினார்.

மேலும் ஸர் ஹென்றி மூர் சொல்லியதாவது:-

மாணவர்களிடையேயும் இன்றுள்ள நிலைமையில் அதிருப்தி ஏற்படாத வண்ணம் பாதுகாத்துக் கொண்டுவரவதாயிருந்தால், சர்வகலாசாலைப் பிரவேசப் பரீட்சையின் தராதரத்தை உயர்த்திக்கொள்ள வேண்டும்.

"உயர்தரக் கல்வியல்லாத தொழிற் கல்வி முதலியன போதிப்பதற்கான பாடவிதானம் ஏற்படுத்துவதாயிருந்தால் முதலாவதாக பயிற்சி பெற்ற ஆசிரியர்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். பள்ளிக்கூடங்களிலும் ஆஸ்பத்திரிகளிலும் இது மிகவும் முக்கியம். பயிற்சி பெற்றவர்கள் இல்லாமல் ஆஸ்பத்திரிகளாலும் பள்ளிக்கூடங்களாலும் ஒரு பிரயோஜனமும் இல்லை.

ஸர் ஹென்றி தொடர்ந்து கூறியதாவது:-

"நோயற்ற உடம்பு இருந்தால்தான் நல்ல புத்தியும் மூளையும் ஏற்படும்; ஆகவே நல்ல உடற்பயிற்சி மாணவர்களுக்கு அளிக்கப்படவேண்டும்.

"பகிரங்க உத்தியோகங்களுக்கு இப்பொழுது இருக்கும் அலாதிமுடிந்ததும், அரசாங்கம் மிகப்பெரிய பிரச்னைகளை எதிர்காலத்தில் நோக்கவேண்டியிருக்கும். இலங்கை முன்னேற்றமடையவேண்டுமானால், வகுப்புவாதம், தற்பெருமை முதலியவற்றை இத்தீவின் க்ஷேமத்தையிட்டுஎல்லோரும்கைவிட்டுவிடவேண்டும்" என்று கவர்னர் கூறினார்.

வருமான வரி ஆராய்ச்சி கமிஷன்

புதுடில்லி, அக். 18

வருமான வரி கொடாமல் திருட்டுக் கணக்கெழுதியும் மற்றும் பல உபாயங்களை அனுஷ்டித்தும் தப்பித்து வரும் முதலாளிமார்களைக் கண்டுபிடிப்பதற்காக இந்திய சர்க்கார் நிறுவியிருக்கும் வருமான வரி ஆராய்ச்சிக் கமிஷனுக்கு மாஜி பெடரல் கோர்ட் நீதிபதி ஸர் எஸ். வரதாச்சாரி சேர்மனாக நியமிக்கப் பட்டிருக்கிறார்.

லஞ்ச ஒழிப்பு

அதிகாரிகள் லஞ்சம் வாங்குவதையொழிக்க மராமதது மந்திரி திரு. என். வி. கட்கில் கடுமையான நடவடிக்கை எடுத்து வருகிறார். இதுவரை 12 அதிகாரிகளின் ஊழல்களைக் கண்டுபிடித்து அவர்களை வேலையிலிருந்து விலக்கியிருக்கிறார். அதிகாரிகளின் சொத்துவிபரங்களை அறிவிக்கும்படி ஓர் சுற்றறிக்கை விடுத்திருக்கிறார்.

சர்வ தேச ஆரியன் லீக் தலைவர் மரணம்

சர்வ தேச ஆரியன் லீக் தலைவரான மகாத்மா நாராயண் சுவாமிஜி தனது 88-வது வயதில் அக்டோபர் 15-ம் தேதியன்று காலமானார். இவர் 19 வருட காலம் லீக் தலைவராக இருந்து ஹைதராபாத்திலும் ஸிந்துவிலும் சத்தியாக்கிரகம் நடத்தி வெற்றிபெற்றார்.

நோயின்றியிருத்தற்குரிய உபாயம்

(பிரம்மஸ்ரீ. ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள் எழுதுவது)

திருமாளிகைத்தேவர் என்பவர் சில காலத்திற்குமுன் திருவாவடுதுறையிலிருந்தவர் பெருந்தகைமையாளர். சிவபெருமான்மீது பல பாடல்களைப் பாடியுள்ளவர். அவை திருவிசைப்பா என வழங்கப்படுகிறது. உயிர்க்கு நிலைக்களனாயுள்ள உடம்பைப் பாதுகாக்குமுறையைப்பற்றி அரிய உண்மைகளை எல்லோருமறிய விளக்கியுள்ளார். போசனங் கொள்வதில் மிக நியமமுடையவர். ஒருமுறை கருவூர்த்தேவர் தமது சித்தின் மகிமையால் சத்தியை நோக்கிச்செய்த உத்தமவுணவை இவரிடம் உண்ணக் கொடுத்தார். இவர் உண்ணேன் என்றார். அவர் மனம் வருந்தினார். "வாய்க்கிடங்கொடுத்தால்நோய்க்கிடமாம்" என்று உண்மையை சொன்னார்; அதன்பின் அவர் போயினார். கடும்பசி கண்டபின்பே போசனம் செய்து வந்தமையால் கொடும்பிணி ஒன்றுமின்றி இருந்தார். அக்காலத்திருந்த அறிஞர் பலரும் வியந்து புகழ்ந்தார்கள். நிற்க:

பிறந்த நாட்தொட்டு எண்பது வயது வரையும் ஒரு மருந்தும் பாவியாமல் முன்னே ஒருவன் இருந்து வந்தான். அவ்வயோதிபனை அந்தநாட்டரசன் வரவழைத்து வியந்து பார்த்து "என்ன உபாயத்தால் ஒரு நோயும் இல்லாமல் இவ்வாறு இனிமையாக வாழ்ந்துவருகின்றீர்?" என்று அன்போடு கேட்டான். அதற்கு அவன் "நான்கு முறைகளைக் கடைப்பிடித்துள்ளேன்" என விடை கொடுத்தான். அவை எவை? என்றவுடன் அவன் அடியில் வருமாறு சொன்னான்:

'ஓரடிநடவேன், ஈரடிகிடவேன்
இருந்துண்ணேன் கிடந்துறங்கேன்'

என இப்படிச் சொன்ன பொழுது இவற்றின் பொருளை ஆய்ந்தறிந்து அவ்வரசன் சந்தோஷித்துப் புகழ்ந்தான். தந்நிழல் தன் அடியில் இருக்கும் தருணம் அஃதாவது உச்சிப் பொழுதில் ஒரு வழியும் நடவேன்; ஈரமுள்ள இடத்தில் படுக்கமாட்டேன்; முன் உண்ட உணவு செரியாமல் வயற்றில் இருக்க மேலும் உண்ணேன்; படுக்கையில் கிடந்து கொண்டு உறக்கத்தை வருவியேன்; அஃதாவது அயர்ந்த போதன்றி அமர்ந்துறங்கேன்; ஆதலால் மருந்தொன்றும் வேண்டாது நோயின்றி இப்படியிருந்து வருகின்றேன் என அவன் சொன்னதைக்கேட்டு அரசன் மகிழ்ந்து அனுப்பினான். எனவே உணவைப் பசியறிந்து ஒழுங்காகப் புசித்துவந்தால் அவன் நோயில்லாமல் இருப்பான் என்பதே இதில் உணர்த்தப்பட்டது.

திண்ண மிரண்டுள்ளே சிக்க
அடக்காமல்
பெண்ணின்பா லொன்றைப்
பெருக்காமல்—உண்ணுங்கால்
நீர்கழுக்கி மோர்பெருக்கி நெய்
யுருக்கி உண்பவர்தம்
பேருரைக்கிற் போமே பிணி,

இக்கருத்தையுள்ளடக்கியே எங்கள் செந்நாப்புலவரும்

"மருந்தென வேண்டாவாம்
யாக்கைக் கருந்திய
தற்றது போற்றியுணின்"

அருந்தியது-முன்பு உண்ட உணவு, அற்றது-முற்றுந் தீர்ந்தபடியை, போற்றி யென்றது அற்றபடியை ஆய்ந்தறிந்து நாளும் நன்கு பாதுகாத்து என்றபடி. உணின் என்பது அங்ஙனம் உண்ணுதலின் அருமையையுணர்த்தி நின்றது. உணின் மருந்து வேண்டா என்றதனால் அவ்வாறு உண்ணுவழி நோய் வாய்ப்பட்டு நொந்துதவித்துக் கண்ட மருந்துகளையெல்லாம் உண்டு கழிந்து கிடப்பர் என்பதாயிற்று.

மேல், உணவின் ஏற்றத் தாழ்வுகளால் நோய் உண்டாம் என்றார். இதில் அதனை ஆய்ந்துநின்று அளவறிந்துண்டால் யாதொரு நோயும் இல்லையாம் என்றார்.

பசித்துண்டால் மருந்தருந்த வேண்டாம் என்றது அங்ஙனம் உண்பார் நோயில்லாதவர்களாய் என்றும் இனியராய் இருப்பர் என்பது கருதியென்க.

சயாமிடம் சீனாவின் முக்கோரிக்கைகள்

1945-ம் வருட நிகழ்ச்சியின் எதிரொலி

பாங்காக், அக். 17

சயாமில் வதியும் சீனர்கள் மீது பலாத்காரப் பிரயோகம் செய்து அவர்களைத் துன்புறுத்தியதாக சீன அரசாங்கம் சயாம் அரசாங்கத்திற்குப் புகார் செய்ததை நேயர்கள் நினைவு வைத்திருக்கலாம். இது சம்பந்தமாக சயாமின் மறுமொழியைச் சீனா எதிர்பார்த்து நிற்பதாக சீனாவின் சயாம் ஸ்தானிகர் இன்று குறிப்பிட்டார்.

சீன கோரிக்கைகள் மூன்று. இதற்கு ஜவாப்தாரிகள் தண்டிக்கப்படவேண்டும்; பாதிக்கப்பட்ட சீனர்களுக்கு நஷ்டஈடு வேண்டும்; இனிமேல் இத்தகைய சம்பவம் நிகழாது என வாக்குறுதி வேண்டும்.

சீனக் கம்யூனிஸ்டுகளோ வேறு சீனரோ இந்தக் கலவரத்தின் காரணமாய் இருக்கலாம் என்று கூறப்படுவதை சீன ஸ்தானிகர் முற்றாக எதிர்த்தார்.

ஸ்தலத்தில உள்ள சீனர்கள் சீனத் தேர்தல்களில் கலந்து கொள்வதற்குரிய திட்டத்தை சீன அரசாங்கம் கைவிட்டுவிட்டது என்று சொல்லப்படுவதையும் ஸ்தானிகர் மறுத்திருக்கிறார். (ராய்ட்டர்)

அமெரிக்கா-இந்தியா கப்பற் போக்குவரத்து

கொழும்பு, அக். 20

இந்தியா கப்பற் போக்குவரத்து கம்பெனியினால் அமெரிக்காவிடமிருந்து வாங்கப்பட்ட ஐந்து கப்பல்களில் ஒன்றான 'ஜலகேது' கொழும்புக்கு வந்துள்ளது. இக் கப்பலில் இலங்கைக்கு அமெரிக்காவிலிருந்து ஏராளமான பொருட்கள் வந்துள்ளன. இந்தியா கம்பெனியின் ஐந்து கப்பல்களும் அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் பிரயாணத்தில் ஈடுபடும் என்று கூறப்படுகிறது.

சிர

நேத்திராஞ்சனத் தைலமே சகல வைத்தியர்களாலும் கைவிடப்பட்ட எம்மை புத்துயிர் கொடுத்து காப்பாற்றியது.

சப்தரிஷி வாலிப சங்க கௌரவ காரியதரிசி திரு. வி. கார்த்திகேசு செல்லுவதாவது:

"சென்ற சில காலங்களாக சிர ரோக உபாதையினால் கண்ணிலும் கடும் வருத்தம் ஏற்பட்டு பல வித வைத்தியங்கள் செய்தும் சுகம் காணாது கடைசித் தடவையாக திரு. எம். கே. ஜெகநாதன் கண் வைத்தியரினால் வெளிவரப் பெற்ற சிர நேத்திராஞ்சனத் தைலத்தை இரு கிழமை பாவித்தமட்டில் எமது சகல உபாதைகளும் நீங்கியதுடன் எனது கண்ணுக்கும் பூரண சுகத்தைப் பெற்றேன். இத் தைலத்தின் அபூர்வகுணத்திற்கும் திறமைக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் இதன் நற்குணத்தை மற்றவர்களுக்கும் தெரியப்படுத்த விரும்புகிறேன்". ஒப்பம்

திரு. வி. கார்த்திகேசு
கௌரவ காரியதரிசி,
புங்குடுதீவு.

சிர

நேத்திராஞ்சனத் தைலம்

கண் புகைச்சல், குத்து, கூச்சம், மாலைக்கண், சிவப்பு முதலிய கண் சம்பந்தமான சகல ரோகங்களையும், தும்மல், நீர்வடிதல் முதலிய பீனிச வகைகளையும், கபால இடி, தலைவலி, மயக்கம், இருமல், இளைப்பு, நரம்புத் தளிர்ச்சி, மூலச்சூடு ஆகிய ரோகங்களையும் நிவர்த்தி செய்து, குளிர்ச்சியையும், ஞாபக சக்தியையும் கொடுக்கும். அஸ்மா, காசம், நீரழிவுக்கும் ஓரளவு சுகங் கொடுக்கும். காலம் நீடித்த நோயாளர்கள் நேரிலும் கடிதமூலமும் விபரம் தெரிந்துகொள்ளலாம்.

விலாசம் ஆங்கிலத்தில் தெளிவாய் எழுதுக.

2 அவுன்ஸ் சீசா ரூ. 3-25
4 ,, ,, ரூ. 5-50

தயாரிப்பாளர்:-
எம். கே. ஜெகநாதன்,
யூனிக் கண் வைத்தியர்,
பெரியகடை, யாழ்ப்பாணம்.

தேர்தல் கலவரத்தால் இருவர் தாக்கப்பட்டனர்

ஆஸ்பத்திரியில் ஒருவர் மரணமானார்

கொழும்பு, அக். 20

அம்பாந்தோட்டையில் சமீபத்தில் நடந்த தேர்தல் சம்பந்தமாக ஏற்பட்ட கலவரத்தில் ஒரு கோஷ்டியினர் இருவரைப் பலமாகத் தாக்கியிருந்தனர். தாக்கப்பட்ட இருவரில் ஒருவரான பீட்டர் என்பவர் ஆஸ்பத்திரியில் மரணமானார். தாக்கியவர்களைக் கூறப்படும் எண்மரைப் போலிஸார் கைது செய்துள்ளனர்.

இலங்கை - சிங்கப்பூர் விமான சர்வீஸ்

வியாழக்கிழமைக்குப் பின் ஆரம்ப தேதி நிர்ணயிக்கப்படும்

கொழும்பு, அக் 20

இலங்கை-சிங்கப்பூர் விமான சர்வீஸ் எப்பொழுது முதல் ஆரம்பிக்குமென்று திட்டமாக முடிவு செய்யப்படுமுன் பி. ஓ. ஏ. ஸி. கம்பெனி பிரதிநிதி திரு. பி. லார்ட், வியாழக்கிழமை இங்கிருந்து சிங்கப்பூருக்குப் பறந்து செல்வார் என்றும் அதன் பின்னரே ஆரம்ப தேதி நிர்ணயிக்கப்படுமென்றும் இந்த விமான சர்வீஸ், பிரிட்டன்-இலங்கை சர்வீஸின் தொடர்ச்சியாகவோ அல்லது தனி சர்வீஸாகவோ இருக்குமென்பது பற்றி முடிவுசெய்யப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

இலங்கை தேவாலய திருச்சபைக் கூட்டம்

கொழும்பு, அக். 20

இலங்கைத் தேவாலயத்தின் திருச்சபையின் வருடாந்தரக் கூட்டம் பம்பலப்பிட்டியில் மிலாகிரியா மண்டபத்தில் சங். ஏ. ஜே. கென்டால் பாகெர் தலைமையில் இம் மாதம் 29-ம் 30-ம் தேதிகளில் நடைபெறும்.

திரிகோணமலையில் இருந்து நடந்து வரும் கடற்படையினர்

செவ்வாயில் கொழும்பு வந்துள்ளனர்

கொழும்பு, அக் 20

ராயல் கடற்படையைச் சேர்ந்த ஒரு அதிகாரியும் 17 கடற்படையினரும் திரிகோணமலையிலிருந்து 11-ம் தேதி சனிக்கிழமை முற்பகலில் கொழும்புக்கு கால்நடையாக பிரயாணத்தை ஆரம்பித்துள்ளனர். இது இவர்களுடையசகிப்புத்தன்மையைப் பரிசோதிக்கும் இறுதிப் பரீட்சையாகும்.

இவர்கள் கொழும்பிலிருந்து இம்மாதம் 9-ம் தேதி திரிகோணமலை துறைமுகத்துக்கு 'எச். எம். எஸ். றென்' என்னும் கப்பலில் புறப்பட்டு திரிகோணமலைக்கு இம்மாதம் 11-ம் தேதி காலை 8 மணிக்குப் போய்ச் சேர்ந்தனர். அங்கு போய்ச் சேர்ந்த அரை மணி நேரத்தின் பின் இவர்கள் அங்கிருந்து கொழும்புக்குப்புறப்பட்டுவிட்டனர் இவர்கள் நடந்து வருவதற்கு தம்முடன் போதிய உணவுப் பொருட்களையும் எடுத்து வருகின்றனர். செவ்வாய்க்கிழமை இவர்கள் கொழும்பு வந்து சேர்வர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தலதா மாளிகையின் புதிய தியவடன நிலமை

திரு. ஸி. பி. நுகவிளை தெரியப்பட்டார்

கண்டி, அக். 19

புத்த பகவானின் புதைப்பல் வைக்கப்பட்டிருக்கும் தலதா மாளிகையின் தியவடன நிலமையாக திரு ஸி. பி. நுகவிளை தெரியப்பட்டார். கண்டி நகர மண்டபத்தில் தேர்தல் நடைபெற்றது. இவருக்கு 90 வாக்குகளும் இவருடன் போட்டியிட்ட டி. பி. ரத்வத்தை திஸ்ஸாவாவுக்கு 33 வாக்குகளும் கிடைத்தன.

கிரவுன் தியேட்டர் ஸ்கின்னர்ஸ் ரோட் மருதானை

தினசரி மாலை 6-15, இரவு 9-30 மணிக்கும்
சனியும் ஞாயிறும் மெட்னி 3 மணிக்கும்.

சித்திரகலாவின் உன்னத தயாரிப்பு!

"தாய் நாடு" தமிழ்ப் படம்

வெற்றிகரமான 5-வது வாரம்!

அடக்குமுறைகளுக்கு ஆட்பட்டிருந்த மக்களின் மீட்சிக்காகவும் தாய்நாட்டின் விடுதலைக்காகவும் நடக்கும் போராட்டங்களைக் கொண்டது.

மெட்ரூஸ் மெயில் புகழ் பாட்லிங்மணி
புதிய நடிகை சுந்தரி

மற்றும் பலரும் சிறப்புடன் நடித்தது.

பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் மெட்னியில் பால்கனிக்கு அரைச் சார்ஜ் எடுக்கப்படும்.

கதம்பைக் கயிறு

கிந்தொட்டை கதம்பைக் கயிறுகளும் தும்பால் செய்யப்பட்ட சாமான்களும் நேரிலோ தபால் மூலமோ பெற்றுக்கொள்ளலாம் ஆர்டர்களுக்கு தேவையான சாமான்கள் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.

தேடா கயிறு, கம்பை, வடம், ஈக்கில்தடி, தும்புத்தடி, கயிற்றுப்பாய், காப்பற், கால்மிதி இவ்விடம் குறைந்த விலையில் வேண்டிய தினுசுகளில் பெற்றுக்கொள்ளலாம்.

இத்தோடு திறம் லங்கா பிரான்ட் வினுகரியும், கை பேக்ஸ்களும் கிடைக்கும்.

மொத்த வியாபாரிகளுக்கும் சில்லறை வியாபாரிகளுக்கும் விசேஷ சலுகை உண்டு

விலை விபரங்களுக்கு எழுதுங்கள்.

A. Abdul Kalyoom,
Coir Ropes
Manufacturer at Gintota
No 44, Wolfendahl Street,
Colombo.

ஏ. அப்துல் கையூம்,
44, ஆதிருப்பள்ளித்தெரு,
கொழும்பு.
கயிற்றுத் தொழிற்சாலை,
கிந்தொட்டை.

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டிற்காக, 1947-ம் வருஷம் அக்டோபர் மாதம் 20-ம் தேதி இந்தப் பத்திரிகை 194ஏ, தட்டாரத்தெரு, கொழும்பு சுதந்திரன் அச்சுக்கந்தோரில் அச்சிட்டு, கொழும்பு-மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்பெறுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org